மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 3 | 15 - 7 - 54 | இதழ் 6

நீராவியின் ஆற்றலைக் கண்டுபிடித்த சிறுவன்

ஜேம்ஸ் வாட்

கெட்டிலிலிருந்து வெளிக்கிளம்பும் நீராவி எவ்வளவு வலிவுடையது என்பதைக் கண்டறிய, கைக்கரண்டியைக் கெட்டிலின் வாயில் வைத்து, ஆராய்ச்சி நடத்துகிறான்.

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

அண்ணாவும் மாணவர் இயக்கமும்

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் அரசியல் உலகில் தோற்றங்கொள்வதற்கு முன்பு, தமிழகத்தில், மாணவர் இயக்கம், காங்கிரஸ் கட்சி சார்பினதாகவும், கம்யூனிஸ்ட்டுக் கட்சிச் சார்பினதாகவுமே இருந்துவந்தது. நீதிக்கட்சியின் கொள்கைகளும், பகுத்தறிவியக்கத்தின் கருத்துக்களும் மாணவரிடையே பரவுவதற்கான வழியையும், வகையையும் வகுத்தவர் அறிஞர் அண்ணா அவர்களே யாவார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சும் எழுத்தும், எடுத்துக் கூறும் பொருளும், விளக்கிக்காட்டும் தன்மையும் மாணவர் உலகைத் தம்பால் ஈர்க்கும் தன்மையனவாக இருந்தன. இப்பொழுது அண்ணாவைப் பின்பற்றி பள்ளிதோறும், கல்லூரிகள்தோறும் மாணவர் படைகள் திரண்டவண்ணமிருக்கின்றன. திராவிட மாணவ இயக்கத்துக்குத் தூண்டுகோலாகவும் அடிப்படையாகவும், எடுத்துக்காட்டாகவும், எழுச்சி தருவனவாகவும் துவக்கத்தில் அமைந்தவை இரண்டு கல்லூரிகள். அவை அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், குடந்தைக் கல்லூரியுமாகும்.

1943-ம் ஆண்டில் அறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவாற்ற வந்திருந்தகாலை, அங்குள்ள விருந்தினர் விடுதியில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார்கள். அப்பொழுது பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்த ஆர்வமிக்க மாணவர்கள் அண்ணா அவர்களைச் சூழ்ந்து கொண்டு, இரவு பகல் ஓயாமல் அடுக்கடுக்காகக் கேள்விமேல் கேள்வியாகப் பொழிந்துகொண்டேயிருந்தார்கள். அண்ணா அவர்கள் அவற்றிற்கெல்லாம் பொறுமையுடன் விளக்கந் தந்தார்கள். நீதிக்கட்சி பணக்காரர்—பட்டம் பதவியாளர்—கொள்கையற்றோர்—குணக்கேடர் —உலுத்தர்—உல்லாசக்காரர் ஆகியோர் கையில் சிக்குண்டு இருப்பதைச் சுட்டிக்காட்டி, அது மக்கள் கைக்கு மாற்றப்பட்டால் மாணவர்களின் ஒத்துழைப்பு இயக்கத்திற்கு நிரம்ப கிடைக்கும் என்ற கருத்தை மாணவர்கள் வலியுறுத்திக் கூறினர். மாணவர்கள் தங்கள் படிப்பு முடிந்ததும் இயக்கப் பணியில், இறங்கித் தமக்கு ஒத்துழைப்பு தந்தால், நீதிக்கட்சியிலுள்ள வீணர்களை விலக்கிவிட்டு, அதனை மக்கள் கட்சியாக ஆக்கிக்காட்டத் தம்மால் இயலும் என்று அண்ணா அவர்கள் கூறினார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அளித்த ஊக்கத்தை அடிப்படையாகக்கொண்டு மாணவர்கள் மிக்க ஆர்வங்கொண்டு பாடுபடத் தொடங்கினார்கள். அதன் விளைவாக முதல் திராவிட மாணவர் மாநாடு 1944-ல் குடந்தையில் நடைபெற்றது.

1944 மே திங்களில் அண்ணா அவர்கள் தலைமையில் ஈரோட்டில் திராவிட மாணவர் பயிற்சிக்கான முதல் மாநாடு நடைபெற்றது. மாநாடு முடிந்தவுடன் மாணவர்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் சென்று சொற்பொழிவாற்றிக் கொள்கை விளக்கம் செய்யத் தலைப்பட்டனர்.

பின்னர் 1944 ஆகஸ்டு திங்களில் சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில், அறிஞர் அண்ணா அவர்கள் கட்சியின் பெயரை 'திராவிடர் கழகம்' என்று மாற்றியதோடு, நீதிகட்சியிலிருந்த வீணர்களையும் விரட்டியடித்துக், கட்சியை மக்கள் கட்சியாக்கினார்கள். மாணவர்களுக்குத் தாம் அளித்த வாக்குறுதியை அண்ணா அவர்கள் திறம்பட நிறைவேற்றிக் காட்டினார்கள்.

அறிஞர் அண்ணாவின் சுட்டுவிரல் காட்டியவழியில் செல்ல திராவிட

மன்றம்
இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

15-7-54 வியாழக்கிழமை

மும்முனைப் போர்!

ஜூலை 15-ம் தேதியை மும்முனைப் போராட்ட நாளாகத் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டாடுகிறது. சரியாக ஓராண்டுக்குமுன், மும்முனைப் போராட்டங்களை— அரசியல், சமுதாய, பொருளாதார நிலை ஆகிய மூன்று முனைகளையும் முன்னிறுத்தும் போராட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கியது.

ஜூலை 15 திராவிடத்தின் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான நாளாகும்! திராவிடத்தின் முதற்போர், தாயகத்தின் உரிமைப்போர் எழுந்த பெரும் நாள்! "தமிழரைப் பழித்தோரை, தமிழகத்தைப் பழித்தோரை, தாய் தடுத்தாலும் விடேன்" என்று அறப்போர் வீரர்கள் உரிமை முரசு கொட்டிய நாள்! நாடு சிதைந்தாலும், நகர்கள் அழிந்தாலும், அரசுகள் வீழ்ந்தாலும், வஞ்சகம் வென்றாலும், வாழ்வு பொலிவிழந்தாலும், வளமை சூறையாடப்பட்டாலும், "எல்லாவற்றையும் நாம் இழந்தோம்" என்ற நிலையில், 'இல்லை! மானத்தை மட்டும் இன்னும் இழக்கவில்லை!" என்று மறவர் கூட்டம் ஆர்த்தெழுந்த நாள்! இழிமொழி கேட்டு, புலிநிகர் மாந்தர் வழிவழி வந்தோர், போர்க்கோலம் பூண்ட நாள்! சுரண்டலை எதிர்த்து, சூதுத்தன்மையை எதிர்த்து, வளமார் திராவிடத்தில் வடநாட்டு முதலாளிகள் அமைத்திட்ட கொள்ளைக் கூடாரங்களை எதிர்த்து, போராட்டம் துவங்கிய நாள்! வர்ணாச்சிரமத் திட்டத்தை எதிர்த்து, வாழ்வுக்கொவ்வாத கல்வித்திட்டத்தை எதிர்த்து, ஆணவத்தை எதிர்த்து, எதேச்சாதிகார ஆட்சி முறையை எதிர்த்து, அறப்போர் மூண்ட நாள்!

அரசியல், பொருளாதார, சமுதாயத்துறைகளில் திராவிடத்தின்மீது சுமத்தப்பட்டிருக்கும் இழிகளையும், பழிகளையும் நீக்கிட, திராவிடம் தொடுக்கும் நீண்ட போராட்டத்தின் ஆரம்பம்—வெற்றியின் உச்சிக்கு வீரர்களை அழைத்துச் செல்லும் பாதையில் முதல் கட்டம்—மும்முனைப் போராட்டங்களின் முதற்களங்கள் ஜூலை 15-ம் தேதி காணப்பட்டது.

முரசு அதிர்ந்தது! களம் நெருங்கியது! தாயகம் அழைத்தது! வீரம் விரைந்தது! போர்க்கொடி உயர்ந்தது—வானிலே,—கருப்பும்—சிவப்பும் கலந்த வண்ணம்—, காரிருளை நீக்கவந்த காலைச் செஞ்சுடர்போல!

ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த ஆச்சாரியார் இறுமாப்புடன் இருந்தார்! ஆணவத்துடன் பேசினார்! அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டார்! அணிவகுத்து நின்ற அறப்போர் வீரர்மீது, புகைக்குண்டுகளை, துப்பாக்கி முனைகளை, தடியடிகளை, சட்டப்பிரிவுகளை வீசினார்! அறப்போரை—அறப்போர் துவக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தை அடக்குமுறை கொண்டே அழித்துவிடுவதெனக் கட்டியங்கூறி நின்றார்!

அடக்குமுறைகள் எழுந்தன! தடிகள் தாக்கின. தலையிலிருந்து இரத்தம் பீறிட்டு வழிந்தது. எனினும் நிமிர்ந்த தலை தாழவில்லை! கால்கள் ஒடிந்தன. முன்வைத்தகால் பின்போகவில்லை! கொடிதாங்கிய கரம் முறிந்தது, ஆனால் வளைந்து கொடுக்கவில்லை! தொண்டர்கள் மூர்ச்சையாகும்வரை தாக்கப்பட்டனர், அணிவகுப்பு குலையவில்லை! ஆறு பிணங்கள் வீழ்ந்தன, எனினும் களம் நோக்கி வருவோர் தொகை குறையவில்லை! துப்பாக்கிக் குண்டுகளைவிடச் சட்டப்பிரிவுகள் வேகமாகப்பாய்ந்து வந்தன; ஆறாயிரம் தோழர்கள் சிறையிலே தள்ளப்பட்டனர்!

அடக்குமுறையில் போராட்டம் தளரவில்லை, அடிபட்ட வேங்கைபோல பாய்ந்துவந்தது! அடக்குமுறையால் கழகம் அழியவில்லை, செழிப்பாக வளர்ந்தது!

மும்முனைப் போராட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கியது! பெரு வெற்றி கண்டுள்ளது! அந்த வெற்றியை ஜூலை 15-ல் கொண்டாடுகிறது!

ஜூலை 15-ம் தேதி தமிழகத்தில் ஓடுகின்ற பகல் ரயில்களெல்லாம் நிறுத்தப்படவேண்டும் என்று அறிஞர் அண்ணா சொன்னார். ஆனால் ஜூலை 15-ம் தேதியன்று அறிஞர் அண்ணா சிறைக்குள் தள்ளப்பட்டுவிட்டார். ஆனால் அவர் இட்ட கட்டளை வீண்போகவில்லை. அவர் குறித்தபடி ஜூலை 15-ம் தேதி காலை கிளம்பிய ரயில்களெல்லாம் நின்றன, நின்றன, நின்றன! கைகாட்டி மரம் மட்டும் நிற்கிற சிறிய ஸ்டேஷனிலிருந்து, ஐந்தாறு பாதைகள் பெரும் சந்திப்புகள் வரை எல்லாவிடங்களிலும் ரயில்கள் நிறுத்தப்பட்டன! அந்த ஒருநாள் ரயில்களல்ல, உண்மையில் ரயில்களைப் பாதுகாக்கிற டில்லி ஆட்சியின் ஆதிக்கம் தமிழகமெங்கும் நிறுத்திவைக்கப்பட்டது!

சிறையிலே அண்ணா இருந்தார், ஆனால் அவரிட்ட கட்டளை நாடெங்கும் நிறைவேற்றப்பட்டது! ஜூலை 15-ல் ரயில்கள் தமிழ்நாடெங்கும் நிறுத்தப்பட்டன! ஒரு பகற்பொழுதிற்குள் ஐயாயிரம் பேர்களுக்குமேல் சிறைபுகுந்தனர்!

வடநாட்டு முதலாளித்துவத்தை எதிர்த்து, "டால்மியாபுரம்" என்ற இழிபெயரை நீக்கி, 'கல்லக்குடி' என்ற அழகு தமிழ்ப்பெயராக்க ஜூலை 15-ல் கல்லக்குடி போராட்டம் அறப்போர் தலைவர் கருணாநிதி தலைமையில் தொடங்கியது. அன்று அவர்கள் மாற்றியமைத்த "கல்லக்குடி" என்ற பெயர் இன்னும் மாறாது—மறையாது — மறுக்கப்படாது — அகற்றப்படாது இருக்கிறது.

மூன்றாவதாக புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து, சென்னையில் அறப்போர் தலைவர் சம்பத்தின் தலைமையின் கீழ் துவங்கிய போராட்டமும் வெற்றிபெற்றது. அப்பொழுது எழுந்த போராட்டத்தின் பலனாக, நாட்டில் எழுந்த கிளர்ச்சியின் விளைவாக, புதிய கல்வித் திட்டம்—ஆச்சாரியாரின் வர்ணாச்சிரமக் கல்வித்திட்டம் இன்று கைவிடப்பட்டது நாட்டைச் சூழவிருந்த பேராபத்து—சிறுவர்களின் எதிர்கால வாழ்வை இருண்டதாக்க முயன்ற சூதுத்திட்டம் விரட்டப்பட்டுவிட்டது. யார் கூறினாலும், எவர் தடுத்தாலும், என் கல்வித் திட்டத்தை மட்டும் கைவிடமாட்டேன் என்று எந்த ஆச்சாரியார் ஆணவத்துடன் அறைகூவினாரோ, அந்த ஆச்சாரியாரே—அவருடைய கட்சியினரால் கைவிடப்பட்டு, ஆட்சிப்பொறுப்பிலிருந்து விரட்டப்பட்டுள்ளார். அவருடைய அற்புதத் திட்டமும் கல்லறைக்கு அனுப்பப்பட்டுவிட்டது. கழகத்தின் கணக்கைக் தீர்த்துக்கட்டுவேன் என்று கட்டியங் கூறிநின்றவர், அவருடைய கணக்குத் தீர்க்கப்பட்டு வெளியில் அனுப்பப்பட்டுவிட்டார். அந்த அளவு 'ஒரு அவதார புருஷர், ஆண்டவனுக்குக் கிடைத்த மகான்' என்று பாராட்டப்பட்ட ஆச்சாரியார்—நேருவின் ஆசான்—காந்தியாரின் சம்பந்தி—பழம்பெருங் காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து விரட்டப்படுமளவுக்கு ஜூலை 15-ல் துவங்கிய அறப்போராட்டம் வெற்றியைக் கொணர்ந்தது.

முதற் போராட்டங்களில், கழகம் துவக்கிய மும்முனைப் போராட்டங்களில் கிடைத்த வெற்றி கண்டு மகிழ்கிறோம். இந்த வெற்றி, இனி நடைபெறப்போகும் எதிர்காலப்போராட்டங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தருவதாகும். "வெறும் வாய்ப்பேச்சில் வல்லவர்கள் போராட்டமென்றால் பதுங்கிவிடுவார்கள்" என்ற ஏளனச்சொல் பேசியவர்களும் இன்று கண்டு பொறாமைப்படுமளவுக்குக் கழகம் தானெடுத்தப் போராட்டங்களை வெற்றிகரமாக்கியுள்ளது. "அடக்குமுறை வீசினால் கழகம் அழிந்துவிடும்" என்று மனப்பால் குடித்தவர்களும் மனமருட்சியுற, கழகம் அடக்குமுறைகளில் அழிந்துவிடாமல், மாறாகப் புதிய வலுவுடன் போராட்டங்களிலிருந்து வெளிவந்திருக்கிறது. புடத்திலே வைக்கப்பட்ட பொன்னின் மதிப்பு குறையாது, அதைப்போல போராட்டத்தில் ஈடுபட்ட கழகத்தின் மதிப்பு குறையவில்லை, வளர்ந்திருக்கிறது.

மிகக் கடுமையான கட்டங்களில், மிகப் பொறுப்புடனும், கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் கழகம் நாட்டு மக்களிடை தான் பெற்ற மதிப்பைக் காத்திருக்கிறது. தானெடுத்த பணியைச் சிறப்புற முடித்திருக்கிறது.

மும்முனைப் போராட்ட நாளைக் கொண்டாடும்பொழுது, அதில் ஈடுபட்டு, சலியாது உழைத்து, இன்ப துன்பங்களை இதமுடன் ஏற்று, வெற்றிக்கு வழிவகுத்தது. அறப்போர் வீரர்கள் முதலிடம் பெறுகின்றனர். 'மமதையாளனுக்குத் தடைவிதிக்கத் தெரியும், மாவீரர்களுக்கு அதை மீறத்தெரியும்' என வீசப்பட்ட தடைகளைக்கண்டு மருளாமல்,

விதிக்கப்பட்ட தண்டனைகளைக் கண்டு அஞ்சாமல், அறப்போரில் அவர்கள் ஈடுபட்டனர். கண்ணிழந்தனர், கரமிழந்தனர், காலிழந்தனர், உயிரையே சிலர் இழந்தனர், மானத்தை மட்டும் இழக்கச் சம்மதிக்காத அவர்கள்! அவர் செய்த சேவை, சிந்திய இரத்தம் வீண்போகவில்லை, ஒருநாள்பொழுது அவர்கள் காட்டிய தீரம் பல தலைமுறைகளைக் காப்பதாகும். அவர்கள் ஒருபொழுது சிந்திய இரத்தம், இந்த நாட்டுச் சிறுவர்களின் வாழ்வையேக் கெடுக்க இருந்த பெரும் பிணியை அகற்றுவதற்கு கைகண்ட மருந்தாயிற்று!

வெற்றி வீரர்களே! நீங்கள் ஆற்றிய பணி கண்டு தாயகம் மகிழ்கிறது, தாய்மார்கள் வாழ்த்துகின்றனர், இளைஞர் கூட்டம் புகழ்கிறது! சிறுவர்கள் வியப்புடன் நோக்குகின்றனர்!

உங்களுக்குக் கிடைத்த தண்டனை, நாட்டுப் பற்றுடைய ஒவ்வொருவனுக்கும் கிடைக்க வேண்டிய நற்சாட்சிப்பத்திரம்! உங்களுக்குக் கிடைத்தச் சிறைவாழ்வு விடுதலைப் பாதையிலே இளைப்பாறிச் செல்லவேண்டிய முதலிடம்!

உங்களுக்குக் கிடைத்துள்ள காயங்கள், தோளிலும், காலிலும், கரத்திலும் முகத்திலும் ஏற்பட்ட தழும்புகள் தியாகத்தின் முத்திரைகள்! விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காகக் கிடைத்த பதக்கங்கள்— அழியாத வெற்றிப் பதக்கங்கள்! பட்டமோ, பதவியோ, படாடோபமோ, அதிகாரமோ எதுவும் தரமுடியாத உயர்தர விருதுகள்!

கண்ணிழந்தோரே! கவலையுறுதீர்கள், நீங்கள் ஆற்றிய தீரத்தைப் பற்றி நாட்டினர் பாடும் வெற்றிப்பரணி உங்களில் நிச்சயமாக விழும்!

காலிழந்தோரே! நீங்கள் அடியெடுத்து வைத்துக்கொடுத்த பாதையைப் பாருங்கள்! பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், அந்த வெற்றிப் பாதையில் ஏறுநடை போட்டு உங்களை வாழ்த்திக்கொண்டு செல்லுகின்றனர்!

மும்முனைப் போராட்ட நாள், திராவிட வரலாற்றில் முக்கியமான நன்னாள்! முதற் போராட்ட வெற்றி நாள்! வெற்றிவிழா! வீரர்தம் திருவிழா!

மும்முனைப் போராட்ட நாள், அரசியல், பொருளாதார, சமுதாயத் துறைகளில் திராவிடம் இனியும் அடிமைப்பட்டிருக்காது எனத் தெரிவிக்கும் நாள்!

அதிகார வெறியுடன், ஆவேசப் புகைச்சலுடன், ஓடிவரும் டில்லி ஏகாதிபத்திய ரயிலே, “சற்றே நில்லும்!” என்று அபாய அறிவிப்பை உயர்த்தும் நாள்!

“வாடாத கொழுத்து, வளையாது வாழ்ந்துவரும் வடநாட்டு ஏகாதிபத்தியமே! ஓடிப்போ இந்த இடத்தைவிட்டு! தேடிச் செல் உன் புகலிடத்தை!” என்று நாட்டுமக்கள் தரும் தீர்ப்பை, அதன் முகத்தில் ஒட்டிடும் நாள்!

“நாட்டிலே நானாவிதச் சாதிப் பாகுபாடுகளைக் கொண்டுவந்து, புல்லறுக்க ஒரு குலமும் புல்லேந்த வேறோர் குலமும், மூட்டை சுமக்க ஒரு குலமும், மூட்டையடிக்க வேறோர் குலமும், உழைத்து உழைத்து உருக்குலைந்துபோக ஒரு குலமும், உழைக்காது உண்டு மேனி குலுங்காமல் வாழ மற்றோர் குலமும் உண்டாக்கிய வஞ்சக வர்ணாச்சிரமத் திட்டமே! உன்னைக் காப்பாற்ற பகவானே வந்து பதினொருவது அவதாரமாக கல்கியார் உருவிலோ, அல்லது இராஜகோபாலாச்சாரியார் உருவிலோ எப்படி வந்தாலும் சரி; மறைந்து வந்தாலும், ஒளிந்து வந்தாலும், கொல்லைப்புறமாக வந்தாலும், சுவரேறி வந்தாலும், எங்கள் தாயகத்தில் உனக்கு இடங்கிடைக்காது! உன் வாடை பட்டாலே நீயார் என்று தேடிக் கண்டுபிடித்து விடுவார்கள்! வடநாட்டுக்குச் சென்றுவிடு, கங்கையில் அமிழ்ந்தாலும் சரி, கைலாசத்துக்கு ஏறினாலும் சரி! தொலைந்துபோ எங்கள் துன்பத்தின் ஆரம்பமே! எங்கள் இன்பத்தின் எதிரியே!” என்று வர்ணாச்சிரம முறைக்கு வழியனுப்பும் நாள்.

மும்முனைப் போராட்ட விழாவை நாடு களிக்க, நல்லோர் மகிழ, வண்ணக்கொடி வானில் மகிழ்ந்தாட, கொண்டாடுகிறோம்!

உயிர்நீத்த மாவீரர்களுக்கு நமது வணக்கம்!

தாயகத்தின் மானங்காத்த அறப்போர் தொண்டர்களுக்கு நமது வாழ்த்துகள்!

கட்டுப்பாடும், கண்ணியமும் சிறந்திட, மும்முனைப் போராட்டத்தில், ஈடுபட்ட கழகத் தோழர்களுக்கு, அறப்போர் தலைவர்களுக்கு, நமது மகிழ்ச்சிச் செய்திகள்!

வாழ்க வீரர்கள்!

வளர்க வெற்றி!

கருத்துக் கதிர்

பண்டிதரின் அச்சம் — ஆசிரியர்

மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்படுவதை இன்று காங்கிரஸ் தலைவர்கள் ஆதரிக்கவில்லை. பலமாக எதிர்க்கிறார்கள். மொழிவழி பிரிந்திருக்கும் மாநிலங்களிடையே எழும் எல்லைக் கிளர்ச்சிகளையும் அவர்கள் ஒதுக்கித் தள்ளுகின்றனர். அவர்களுடைய கருத்துப்படி, மொழிவழி மாநிலங்களுக்காகப் போராடுவதோ, எல்லைக் கிளர்ச்சிகளில் ஈடுபடுவதோ தேசத்துரோகமான காரியங்களாகும். இதில் வேடிக்கையென்னவென்றால், மொழிவழி மாநிலங்கள் அமையவேண்டுமென்ற கொள்கை முதன் முதலில் தீவிரமாகப் பிரசாரம் செய்தது காங்கிரஸ் கட்சியாகும். வெள்ளையன் ஆட்சிக்காலத்தில், "ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் சூட்சியால் இந்தியா தாறுமாறாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் முறியடிக்கப்பட்டதும், இந்தியா சுதந்தரமடைந்ததும், மொழிவழி மாநிலங்கள் அமையும்" என்று காங்கிரஸ் தலைவர்கள் அன்று முழக்கமிட்டனர். காங்கிரசின் அடிப்படைத் திட்டங்களில்—அவற்றை உள்ளடக்கிய கராச்சி தீர்மானங்களில் ஒன்றாக மொழிவழி மாகாண அமைப்பு இருந்தது. பிரிட்டிஷ் 'ஏகாதிபத்தியம் நீங்கியது, சுதந்தரம் வந்தது. காங்கிரசும் பதவியில் அமர்ந்தது. ஆனால் வாக்களிக்கப்பட்டபடி, மொழிவழி மாகாண அமைப்பு எடுத்துக்கொள்ளப்படவில்லை. மாறாக, 'மொழிவழி மாநிலம் கேட்பது இந்தியாவின் ஒற்றுமையைக் கெடுப்பது, பண்பாட்டைக் குலைப்பது" எனறெல்லாம் காரணங்கள் காட்டப்பட்டு எதிர்க்கப்படுகிறது.

திருவாங்கூர்-கொச்சி பகுதியில் சேர்க்கப்பட்டிருக்கும் தமிழ்ப்பகுதிகள் தமிழகத்துடன் சேர்க்கப்படவேண்டுமெனக் கிளர்ச்சி துவக்கப்பட்டிருக்கிறது. ஆந்திரத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் சித்தூர் எல்லையிலுள்ள தமிழ்ப்பகுதிகளுடன் இணைக்கப்படவேண்டுமென்ற கிளர்ச்சியும் இருக்கிறது. இதுவல்லாமல், இதே போன்ற கோரிக்கைகள் பல கன்னடத்திலும், ஆந்திரத்திலும், மராத்தியப் பகுதியிலும் நிலவுகின்றன. இதிலுள்ள நீதி நியாயங்களைப் பார்ப்பதை விட்டு, எல்லைக்கிளர்ச்சிகளில் ஈடுபடுவதே தவறு என்று மாநிலக்காங்கிரஸ் கமிட்டிகள் தமது கட்சியினருக்குக் கட்டளையிடுகின்றன. காங்கிரஸ்காரர்கள் எவரும் எல்லைக் கிளர்ச்சிகளில் கலந்துகொள்ளக்கூடாதென காங்கிரஸ் தலைவர் பண்டித நேருவும் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தாராம்.

வெள்ளை ஏகாதிபத்தியம் இந்தியாவைத் தாறுமாறாகப் பிரித்துவைத்திருக்கிறது என்று எந்தக் காங்கிரஸ் தலைவர்கள் கனல்பொறி பறக்கப் பேசினார்களோ, அவர்களே இன்று தாறுமாறாகப் பிரிந்துகிடக்கும் இந்தியாவை சரியான முறையில் பிரிப்பதை எதிர்க்கிறார்கள். காரணமென்ன?

வெள்ளை ஏகாதிபத்தியம் போனதும், அந்த இடத்தில் வடநாட்டு ஏகாதிபத்தியம் அமர்ந்திருக்கிறது, இந்தி ஏகாதிபத்தியம் வந்திருக்கிறது. எனவே மொழிவழி மாநிலங்கள் அமைந்து; ஆங்காங்கு தன்மான உணர்வுடைய அரசுகள் அமைந்தால், டில்லி ஆதிபத்தியத்தின் அதிகாரம்—பிடிப்பு சரியும் என்று அவர்கள் அஞ்சுகின்றனர். மேலும், மொழிவழி மாகாணங்கள் அமைந்ததும், அந்தந்த பகுதியைச் சேர்ந்த தாய்மொழிகள் ஆக்கம்பெற்றுவிடும். இதனால் இந்தியின் ஏகபோக ஆட்சிக்காக செய்யப்படும் முயற்சிகள் மட்டந்தட்டப்பட்டுவிடும். எனவே, டில்லி அதிபர்கள்—இந்திப் பிரியர்கள் மொழிவழி மாநிலங்கள் அமைவது கூடாது என்று கூறுகின்றனர்.

மொழியுடன் இனத்தாலும், கலாசாரத்தாலும் இந்தியாவிற்குள் பாகுபாடுகள் இருக்கின்றன. எனவே மொழிவழி என்று ஆரம்பிப்பது, அத்துடன் நிற்காது. கலாசாரத்தின்படி, இனத்தின்படி தனிப்பட்ட பகுதிகள் டில்லி ஆதிக்கத்தை உதறித்தள்ள முற்படும் என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கிறது. தென்னாட்டில் முதலில் எழுந்த "தமிழ்நாடு தமிழருக்கே!" என்ற ஒலி அத்துடன் நிற்கவில்லை, "திராவிடநாடு திராவிடருக்கே!" என்று வளர்ந்தது. தனிப்பட்ட மொழி தனிப்பட்ட வரலாறு, தனிப்பட்ட கலாசாரம், தனிப்பட்ட இனம் என்ற வகையில், திராவிடத்தில் கிளர்ச்சி மூண்டிருப்பது நேரு பண்டிதருக்குத்

தெரியாமலில்லை. எனவேதான், மொழிவழி மாநிலக் கிளர்ச்சிகளில் காங்கிரஸ்காரர்கள் ஈடுபடக்கூடாதெனக் கட்டளையிடவந்த நேரு, தென்னாட்டைக் குறிப்பிட்டேச் சொல்லுகிறார். "ஆரம்பத்தில் தென்னாட்டில் மட்டும் இப்பிரச்சினை அடைபட்டுக் கிடந்தது. இப்பொழுதோ இது நாடு பூராவிலும் பரவி. பலவித வேடிக்கையான கோரிக்கைகளை எழுப்பியிருப்பதோடு, கடும் வாதங்களையும் மூட்டியுள்ளது" தென்னாட்டில் எழுந்த பிரச்சினை, இங்கு மட்டுமல்ல இந்தியா பூராவிலும் பரவிவருகிறது. அது பலவித கோரிக்கைகளையும் கடுமையான வாதங்களையும் உண்டாக்கியிருக்கிறது. அந்தப் பலவித கோரிக்கைகள் என்ன? கடுமையான வாதங்கள் எவை? என்பதுபற்றி நேரு பண்டிதர் விளக்கமாகக் கூறவில்லை. இந்தக் கோரிக்கைகள், வாதங்கள், பிரச்சினைகள் வளர்ந்தால் என்னவாகும் என்பதை மட்டும் அவர் கூறுகிறார் "இந்திய ஒற்றுமை, ஐக்கிய பாத்தியம் கெட்டுவிடும்" என்கிறார்.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் ஒரே ஆட்சிக்குள், ஒரே மொழிக்குள், ஒரே ஏகாதிபத்தியத்திற்குள் கொண்டுவர காங்கிரஸ் தலைவர் முயன்றபோதிலும், ஒன்றுபட்டிருக்க முடியாத அளவுக்கு மொழிவகையாலும், வரலாற்று வழியாலும், பொருளாதார அமைப்பாலும், கலாசாரப்பிரிவாலும், இந்தியத் துணைக்கண்டம் பிரிந்துகிடக்கிறது. தனியுரிமையுடன் அவைகள் பிரிந்து வாழும்வரை, பிரச்சினைகளும், கோரிக்கைகளும், கடும் வாதங்களும் இருக்கத்தான் செய்யும், நாடு பூராவும் பரவியபடிதான் இருக்கும். அதனால்தான், தென்னாட்டில் எழுந்த பிரச்சினை, நேரு பண்டிதருக்கு அச்சமூட்டுவதாக, டில்லி அதிபதிகளைக் கலங்க வைப்பதாக, இந்திக் காவலர்களைப் பயமுறுத்துவதாக வளர்ந்திருக்கிறது.

ஃ ஃ ஃ

பாலைவனம் சோலைவனமாகிறது

"பிரிவினை மனப்பான்மை கூடாது, பாரத தேசத்தின் ஐக்கிய பாத்தியத்தைக் குலைக்கக் கூடாது" என்றெல்லாம் காங்கிரஸ் தலைவர்களும், டில்லி ஆதிக்கக்காரர்களும் கூறுகிறார்களே தவிர, பெரும் பெரும் திட்டங்கள், நாட்டின் வாழ்வை வளம்படுத்தும் நீர்ப்பாசனங்கள், தேக்கங்கள், தொழிற்சாலைகள் எல்லாவற்றையும் அமைக்கும் எல்லாம் எவ்விதமாகவோ வடநாட்டிலேயே அமைந்துவிடுகின்றன. தென்னாட்டுப்பக்கம் அவர்கள் பார்வை திரும்புவதே கிடையாது. தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டங்கள் போன்று 100 கோடி, 200 கோடி என உருவாக்கப்படும் திட்டங்கள் எல்லாம் வடநாட்டை வளம்படுத்தவே தீட்டப்படுகின்றன. வரிப்பணம் தருவதற்கு மட்டும் திராவிடத்துக்கு இடம் தரப்படுகிறதேயன்றி, வரிப்பணத்திலிருந்து பலன்தரும் திட்டங்களை உருவாக்கும்பொழுது திராவிடம் மறக்கப்பட்டுவிடுகிறது.

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தைப் போலவே, அண்மையில் பஞ்சாப் பகுதியில், பாக்ரா நங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. உலகத்திலேயே மிக நீளமான கால்வாய்த் திட்டமாம். இரு மலைகளைக் குடைந்து கால்வாய் திறக்கப்படுமாம். அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக உயரமான அணைக்கட்டு எழும்புமாம். திட்டம் பூர்த்தியானதும் பாலைவனமாக இருக்கும் பஞ்சாப் சோலைவனமாகப் பசுமை கொழிக்க காட்சியளிக்குமாம்! இந்த முயற்சிக்கு செலவிடப்படும் பணம் ரூ. 156 கோடி!

பஞ்சாபில் பாலைவனம் சோலைவனமாக்கப்படுகிறது, இங்கு திராவிடத்தில் சோலைவனங்கள் பாலைவனமாகின்றன! 156 கோடி ரூபாயில் மலையைக் குடைந்து, காய்வாய் வெட்டப்பட்டு, மணல் பரந்தவெளி பசுமைதவழும் நாடாக ஆக்கப்படுகிறது. பணம் லட்சியமின்றி செலவிடப்படுகிறது. திட்டத்தை நிறைவேற்றுவதால் பாகிஸ்தானுடன் சச்சரவு அதிகரிக்குமென்றாலும் கவலையில்லையென்று காரியமாற்றப்படுகிறது. இங்கோ சென்னையில் டிராம் வேலையை எடுத்து நடத்துவதிலிருந்து, சேலத்திலிருக்கும் இரும்புக் கனிகளை வெளிக்கொண்டுவருவதுவரை, என்ன செய்வது? என்று யோசிக்கின்றனர். வரிப்பணத்தையெல்லாம் கொட்டியளந்துவிட்டு, பின்வாயில் விரலை வைத்துக்கொண்டு இங்கிருப்போர் உட்கார்ந்திருக்கின்றனர். வாங்கிய வரிப்பணத்தை வைத்துக்கொண்டு, அங்கு உலகத்தில் மிகப்பெரிய அணைக்கட்டுகள், கால்வாய்கள், தொழிற்சாலைகள் உருவாக்குகின்றனர்.

பண்டமாற்றம்!

ஆக்கியோர் [illegible]

“சமாதானம், ஜனநாயகம், சமதர்மம் ஆகிய எல்லா தத்துவங்களும் இராமாயணத்தில் இருக்கின்றன, கம்பனைப் போன்ற காவிய கர்த்தா கிடையாது, இராமபிரானைப் போன்ற குணச்சித்ரமான மகா புருஷன் கிடையாது” என்று வானளாவ, தன்னிரு தோள்களும் எட்டுத் தோள்களாகப் பூரிப்படைய தோழர் (இப்பொழுது ஸ்ரீலஸ்ரீ) ஜீவானந்தம் அவர்கள் பேசினார்களல்லவா! புராணக் கதையை இப்படி ஒரு பொதுவுடைமைக்காரர் போற்றிப் புகழ்கிறாரே என்று எல்லோரும் வியப்படைந்தார்கள். ஆனால் ஜீவானந்தம் பேசியதற்குப் பலன் கிடைக்காமற் போகவில்லை. கம்ப ராமாயணக் காலட்சேபத்தை நடத்துவதன் மூலம், அங்குக் கூடியிருந்த “ஜனசமுதாயத்தை” அப்படியே அவர் காட்டும் பிரக்யட்சக் கண்ணோட்ட யதார்த்தப் பொதுவுடைமைப் பாதைக்கு அழைத்துவந்துவிடலாம் என்றுதான் பேரன்பர் ஜீவானந்தம் பேசினார். உருகினார். அதைக் கேட்டதும், “பொதுவுடைமையென்றால் ஏதோ புரட்சி! மாறுதல்! நமக்குப் பேராபத்து! என்று நினைத்துக்கொண்டிருந்தோமே! காரல் மார்க்ஸ் எழுதியதை, எஞ்சல்ஸ் தீட்டியதை, லெனின் கூறியதை, ஸ்டாலின் வகுத்ததை, மாலென்கோவ் நினைப்பதை எல்லாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கம்பநாட்டாழ்வார் தமது இராமாயணத்தில் எழுதிவிட்டாராம்! அப்படியானால் போதுமே!” எனப் புராண இதிகாசக்காரர்கள் மனங்குளிர்ந்து இனி நடத்தும் சத்கதா காலட்சேபங்களில், பொதுவுடைமையையும், சேர்த்துப் பிரசாரம் செய்வதென முன்வந்துவிட்டார்கள்.

சிந்தாதிரிப்பேட்டை ஆதிகேசவப்பெருமாள் கோவிலில், திருவருள் தவநெறிக் கூட்டத்தின் ஆண்டுவிழா நடைபெற்றது. அதன் மூன்றாவது நாள் கூட்டத்தில் (ஜூலை 7-ல்) திருமுருக ஸ்ரீ கிருபானந்த வாரியர் அவர்கள் பின்வருமாறு பேசியிருக்கிறார். “அக்காலத்தில் மன்னர்களின் மனைவிகள் தெய்வபக்தி மேலீட்டினால் கோவில் விக்ரகங்களுக்கு ஆபரணங்களை அணிவித்து மகிழ்ந்தார்கள். தனவந்தர்கள் கோவில் திருப்பணிகளுக்குப் பணவுதவி செய்தார்கள், தனி உடைமையாக இருந்த சொத்து பொதுவுடைமையாக ஆயிற்று. எல்லா மக்களும் பார்த்து ஆனந்திக்கும்படி பொதுவுடைமையாக உள்ள கோவில் ஆபரணங்களையும், நகைகளையும் மீண்டும் தனிஉடைமையாக்கும்படி கேட்கின்றனரே! இது சரியா?” என்பதாகும்.

‘மதுரையம்மனுக்கும், காஞ்சிநாதருக்கும், அரங்கத்துப் பெம்மானுக்கும், திருவேங்கட மலையானுக்கும் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் நகைகள், சொத்துக்கள் தேவையா? அந்தப் பணத்தையெல்லாம் ஏழைகளுக்கு கொடுக்கக் கூடாதா!’ என்று கேட்பவர்களுக்குக் கிருபானந்தவாரியார் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

எவ்வளவு சுவையாக ஆக்கிவிட்டார் பார்த்தீர்களா! கோவில் திருப்பணி செய்வது தனியுடைமையை அழித்துப், பொதுவுடைமையை வளர்ப்பதாம். கோவில் பொதுவுடைமையின் அம்சமாக இருக்கிறது. ஆகவே கோயில் சொத்துக்களைப் பிரித்து ஏழை எளியவர்களுக்குக் கொடுத்தால், அது பொதுவுடைமையை அழித்துத் தனியுடைமையை வளர்ப்பதாகுமே என்று கிருபானந்தவாரியார் கவலையுறுகிறார்!

உலக சமாதானம், ஜனநாயகம், சமதர்மம், இவையெல்லாம் புராணக் கதையொன்றில் பொதிந்திருக்கின்றது என்று ஜீவானந்தம் முழங்குகிறார்.

கோவில்களில், கோவில் சொத்துக்களில், அம்மனும், ஆண்டவனும் அணிந்திருக்கும் ஆபரணங்களில் பொதுவுடைமை தத்துவம் பொதிந்திருக்கிறது என்று கிருபானந்தவாரியார் முழங்குகிறார்.

“இராமாவதாரம் இருக்கிறதே, அது உலக விடுதலையின் எடுத்துக்காட்டாக வந்த குணச்

அட்டைப்பட விளக்கம் : ஜெகிலர். 169

தொழிற் புரட்சியின் ஆரம்பம்!

18-வது நூற்றாண்டின் மத்தியில், தொழில் உற்பத்தி முறையில் மிகப்பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. அதற்கு முன்பெல்லாம் எல்லாத் தொழில்களும் குடிசைத்தொழில்களாக இருந்தன. பொருள்களெல்லாம் கையினாலேயே செய்யப்பட்டுவந்தன. துணிகள் வேண்டுமென்றால், பருத்தியெடுத்து, அதன் பஞ்சைப் பதப்படுத்தி, கைராட்டினத்தில் நூலாக்கி, அதிலிருந்து ஆடைகள் நெய்யப்பட்டன. இதில் நீண்டநேரம் எடுத்ததுடன், செய்யப்படும் பொருள்களும் குறைவாயிருந்தன. இவ்வாறு தன்னந்தனியாக ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு தொழிலைச் செய்வது என்ற முறைபோய், கூட்டங் கூட்டமாகக் கூடி, ஒரு தொழிலைச் செய்தனர். இன்றைய தொழிற்சாலைமுறை இதிலிருந்து உண்டானதென்னலாம்.

பின்பு சக்கரங்கள், இயந்திரங்கள், இவைகளின் துணையால், விரைவாகவும், அதிகமாகவும் பொருள்களை உற்பத்தி செய்ய முயலப்பட்டது. முதலாவதாக துணி செய்யும் தொழிலில் இயந்திரம் பொருத்தப்பட்டது. இதனால் ஒருவன் ஒரு கதிரை மட்டும் சுழற்றிக்கொண்டிருப்பது என்பது போய், ஒரு பெரிய சக்கரத்தைச் சுழற்றுவதன்மூலம் ஒருவனே பல கதிர்களை சுழற்ற முடிந்தது. இதைப்பார்த்தவர்கள், இயந்திரங்களைப் பொருத்துவதால் மனிதனுடைய உழைப்பு குறைவதுடன், உற்பத்தியும் பெருகுகிறது என்பதைக் கண்டு, இயந்திர வளர்ச்சிக்குப் பாடுபட்டனர்.

ஆனாலும், இயந்திரங்கள் உண்டாக்கிச் சேர்க்கப்பட்டபோதிலும், அந்த இயந்திரங்களை மனிதன் தன் கையினால் சுழற்றியோ, காலால் மிதித்தோ இயக்கவேண்டியிருந்தது. இயந்திரங்களை இயக்குவதற்கு மனித சக்தியை உபயோகிப்பதற்குப் பதில் வேறு வழிகளில் இயக்க ஆராயப்பட்டது. அவ்வாறு நடந்த ஆராய்ச்சிகளில் ஜேம்ஸ்வாட் என்பவர் உண்டாக்கித்தந்த நீராவி யந்திரம் மிக முக்கியமானது.

சிறு வயதினனாக இருக்கும்பொழுது, ஜேம்ஸ்வாட் அடுப்புக்குப் பக்கத்தில் அமர்ந்து, பானையில் தண்ணீர் கொதிப்பதை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருப்பாராம். தண்ணீர் கொதித்ததும், மேலே மூடப்பட்டிருக்கும் தட்டு மேலே தள்ளப்பட்டு விழுந்துவிடுமாம். எவ்வளவு அழுத்தமாக மூடப்பட்டாலும், நீராவி அதைத் தள்ளிவிடுவதைப் பார்த்த சிறுவனுக்கு அது புதுமையாக இருந்தது. நீராவியின் சக்தியைக்கொண்டு ஒன்றை தள்ளிவிடலாம் என்ற எண்ணம் பிறந்தது.

இந்த சிந்தனை வளர்ந்து, பின் சற்றுப் பெரியவனானதும், ஜேம்ஸ்வாட் நீராவியால் இயக்கப்படும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

முதலில் ஜேம்ஸ்வாட் கண்டுபிடித்த நீராவி இயந்திரங்கள் தண்ணீர் இறைக்கவும், துணி ஆலைகளில் நூல் சுழற்றவும் பயன்படுத்தப்பட்டன. பின் ரயில்வண்டிகளுக்கும், அதற்குப்பின் கடலில் செல்லும் கப்பல்களுக்கும் ஜேம்ஸ்வாட்டின் நீராவி இயந்திரங்கள் சேர்க்கப்பட்டன. இதனால் விரைவாகவும், வேகமாகவும் அதிகமாகவும் பொருள்களை உற்பத்தி செய்யும் முறை மனித சமுதாயத்துக்குக் கிடைத்தது.

உற்பத்தி முறையில் இதனால் ஏற்பட்ட மாபெரும் மாறுதலே தொழிற்புரட்சி என்று கூறப்படுகிறது. இந்தப் புரட்சியின் ஆரம்பம் சிறு, சிறு கண்டுபிடிப்புகளிலிருந்து உண்டானதாகும்.

சித்ரமகாபுருஷனின் அம்சம்'' என்று கூறுகிறார் ஜீவானந்தம்.

''பத்து லட்சம் ரூபாயில் திருவேங்கடநாதன் தலையில் வைரமுடி இருக்கிறதே, அது பொதுவுடைமைத் தத்துவத்தைப் பிரகாசிக்கச்செய்யும் எடுத்துக்காட்டு!'' என்று கிருபானந்தவாரி தத்துவவிளக்கம் தருகிறார்.

பொதுவுடைமை ஜீவானந்தம் கதா காலட்சேபம் செய்கிறார், கதா காலட்சேபம் செய்யும் கிருபானந்தவாரி பொதுவுடைமையைப் பற்றி விளக்குகிறார்! இருவரும் பண்டமாற்றுதல் செய்துகொண்டுள்ளனர்!

ஜீவானந்த வாரியாரும், கிருபானந்தவாரியரும்! பார்க்கப் பரமானந்தமாயிருக்கிறது! இனி இரண்டுமேடைகள் தேவையில்லை. இரண்டுபேரும் ஒன்றுசேர்ந்து காலட்சேபங்கள் நடத்தினால், நூறு தலைமுறைகளில் செய்யக்கூடிய காரியத்தை ஒரே தலைமுறையில் செய்துவிடலாம்!

புரட்சிக்கனல்!

பிரெஞ்சு நாடு அலங்கோலமாகக் கிடந்தது, வறுமைப்பிடியில் சிக்கி, மக்கள் தவித்தனர். "பசியோ, பசி!" என்ற கூக்குரல். பாலின்றி குழந்தை இறக்க, அதுகண்டு தலையிலடித்துக் கொண்டு தாய் கதறியழ, வேதனை தாளாமல் பாட்டாளி ஓடினான். தாங்கமுடியாத வறுமை! அதைவிடத் தாங்கமுடியாத வரிச்சுமை! ஓயாமல் உழைத்தும், உடலைக் கசக்கிப் பிழிந்தும் அவன் கண்டதென்ன? இருண்டுகிடக்கும் குடிசை, அதில் இறந்துகிடக்கும் குழந்தை, அருகே மாரடித்து அழும் மனைவி! அவன் மட்டுமா, அவனைப்போலவே லட்சக்கணக்கான பாரிஸ் நகரமக்கள், வறுமையால் வாட்டப்பட்டு, கொடுமையால் தாக்கப்பட்டு, பஞ்சடைந்த கண்ணினராய், பரிதாபம் மிகுந்த பார்வையுடன் உலவி வந்தனர்.

நாட்டின் மன்னனோ கோட்டையில் கொலுவீற்றிருந்தான், கோமளவல்லிகள் புடைசூழ கோலாகலப் பிரபுக்கள் வேடிக்கை காட்ட. அரண்மனை வாழ்வில், அதிகார ஆணவத்தில், மது தரும் போதையில், மங்கையர் தரும் களிப்பில் மூழ்கிக்கிடந்த அவனுக்கு மக்கள் படும் அவதி எப்படித் தெரியப்போகிறது? நாட்டு மக்களைப்பற்றிய பேச்சு வந்தாலே, அவனுக்குச் சிரிப்புதான் வந்தது. அரசனுக்கு எவ்வளவு வேலைகள் இருந்தன, மான்வேட்டைக்குச் செல்லலாமா? மாரன் வேட்டைக்குச் செல்லலாமா? வைரமுடி அணியலாமா? இரத்தின கிரீடம் புனையலாமா? நல்லதோர் நிலாவிருந்து எங்கே அமைக்கலாம்? நடனமாட யாரைக் கூப்பிடலாம்? என்பன போன்ற முக்கிய பிரச்சினைகளே மன்னனுடைய கொலு மண்டபத்தில் விவாதிக்கப் பட்டன. மக்களோ! பசிக்கு என்ன செய்வது? பாதிப் பணத்துக்கு ரொட்டித் துண்டு கிடைக்குமா? போன்ற சிறு பிரச்சினைகளையே கவனித்துக்கொண்டிருந்தனர். சுத்த நாகரிகமற்றவர்கள்! காட்டுமிராண்டிகள்! முட்டாள்கள்! மூடர்கள்! மன்னனுக்கும் அவனைச் சூழ்ந்திருந்த பிரபுக்களுக்கும் நாட்டுமக்களைப் பற்றி அவ்வளவுதான் கூறமுடிந்தது.

மக்கள் புழுப்போலத் துடித்தனர், பிரபுக்களிடம் கெஞ்சினர், மன்னனிடம் மண்டியிட்டனர்; பதிலேதும் வரவில்லை, பலனேதும் கிடைக்கவில்லை. வேதனை புரண்டது, வெடித்தது எரிமலை! நெளிந்துகிடப்பது நின்றது; நிமிர்ந்து நின்றான்! கெஞ்சிக் கேட்பது மறைந்தது; கோபத்துடன் கேட்டான்! புனல் வழிந்த கண்களில் கனல் தெறிக்க, உலர்ந்துபோன உதடுகளில் புரட்சி கீதம் தெறிக்க, சோர்ந்து கிடந்த கரத்திலே வாளும், சோம்பிக்கிடந்த கருத்திலே உறுதியும் பூண்டு, பிரெஞ்சு மக்கள் வெளிக்கிளம்பினர், 1789-ம் ஆண்டு, ஜூலை 14-ந் தேதி! அன்றுதான் பாஸ்டிலியெனும் சிறைச்சாலை வீழ்ந்தது!

ஜூலை 14 பாஸ்டிலி வீழ்ந்தது! அந்த நாள் பிரெஞ்சு புரட்சி நாளாயிற்று!

பிரெஞ்சு மக்கள் புரட்சிக்கோலங் கொண்டது. வறுமையை நீக்க, வரிச்சுமையைக் குறைக்க, ஏற்றத் தாழ்வுகளை நீக்கிச் சமத்துவத்தைப் பெற, சகோதரத்துவத்தை நிலைநாட்ட, மன்னனுடைய ஆட்சியை அகற்றி மக்களுடைய விடுதலை ஆட்சியைப் பெற. ஆனால் முதலில் அவர்களுடைய கவனம் பாய்ந்தது பாஸ்டிலிமீது! பாஸ்டிலி அவர்களுக்கு அடக்குமுறையின் கூடாரமாக, அதிகாரத்தின் பிரதிநிதியாக, மக்களுடைய விடுதலை உணர்ச்சியை அவமானப்படுத்தும் சின்னமாக விளங்கியது. எனவே அவர்களுடைய கோபமனைத்தும், மன்னனின் மேல், அதிகாரத்தின் மேல், வறுமையின் மேல், கொடுமையின் மேல் கொண்ட கோபமனைத்தும், அந்தப் பாஸ்டிலிக் கோட்டைமீது பாய்ந்தது! பாஸ்டிலியைத் தகர்த்துவிட்டதாலேயே புரட்சியை ஆரம்பித்த குறிக்கோள்களெல்லாம் முடிவடைந்துவிடவில்லை. ஆனால் பாஸ்டிலி தகர்க்கப்பட்டது பிரெஞ்சு புரட்சியின் ஆரம்பமாயிற்று. பாஸ்டிலி தகர்க்கப்பட்ட நாள் பிரெஞ்சு புரட்சி நாளாயிற்று. தனிப்பட்டு பார்க்கும்பொழுது பாஸ்டிலி சம்பவம் சாதாரணமானதாக இருக்கலாம். ஆனால் அது ஒரு பெரும் புரட்சியை மூட்டிவிடும் ஆற்றலாக இருந்தது, சிறு பொறி பெருங் காட்டுத் தீயை மூட்டிவிடுவதைப் போல!

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,,	0—4—0	0— 5—0

மன்னன் இல்லை மணிமுடி உண்டு

ஏழை எளியவர்களையும், பஞ்சைப் பாட்டாளிகளையும் வஞ்சித்து, வாட்டி, வதைத்துத் தம்முடைய வாழ்வை வளமாக்கிக்கொண்ட ரஷ்யாவின் ஜார் மன்னர்கள் எப்படிப்பட்ட கோலாகல வாழ்வில் மிதந்துகிடந்தனர் என்பதை, இன்றைய உலகம் ஓரளவுக்கு நன்கு அறிந்தே இருக்கிறது. ஆடம்பர வாழ்வுக்கும் கொடுங்கோலாட்சிக்கும் எடுத்துக்காட்டான மன்னர்களை நினைக்கும்போது, உடனே உலகோர் முன்னிலையில் வந்து நிற்பவர்கள் ஜார் மன்னர்கள்தாம். அவர்கள் தம்முடைய வாழ்வின் சுவையைப் பற்றிதான் கணக்கிட்டுவந்தனரே யொழிய, மக்களின் மீது ஏற்பட்டிருந்த துன்பச் சுமையைப் பற்றிக் கணக்கிட்டதில்லை; கணக்கிட விரும்பியதில்லை.

ஜார் மன்னர்கள் தாங்கள் கொண்டிருந்த அரியணை, அணிகலன்கள், மணிமுடி, உடைவாள், செங்கோல் போன்றவைகளை ஆடம்பரத்தின் அறிகுறியாகவும், அழகின் வடிவினவாகவும் ஆக்கிக்கொள்ள செலவழித்த பொருள் கொஞ்சநஞ்சமல்ல; ஒவ்வொரு ஜார் மன்னனும் தத்தமது விருப்பத்திற்கேற்றாற்போல் மேற்கண்ட ஆடம்பரச் சின்னங்களை மாற்றியும், திருத்தியும், பெருக்கியும், புதுப்பித்தும் வந்துள்ளார்கள். இறுதியாக வாழ்ந்த ஜார் மன்னனை இரண்டாவது நிக்கோலஸும், அவனது பரம்பரையினரும் மூண்டெழுந்த புரட்சியால் அழிக்கப்பட்டனர் என்றாலும், அவன் ஆண்டு நுகர்ந்த ஆடம்பரச் சின்னங்களை, ரஷ்ய அரசியலார், கண்காட்சிப்பொருள்களாக வைத்துக் காப்பாற்றி வருகின்றனர். மதிப்பற்ற அரசன் அழிந்தான்; ஆனால் அவனது விலைமதிப்புள்ள அணிகலன்கள் அப்படியே வைத்துக் காப்பாற்றப்பட்டுவருகின்றன.

நகை வணிகரும், பொற்கொல்லரும், வரலாற்றாசிரியர்களும், கண்காட்சிக் காப்பாளரும் கடைசி ஜார் விட்டுச்சென்ற ஆடம்பரச் சின்னங்களை 5,18,00,000 டாலர்களுக்கு மதிப்பீடு செய்கிறார்கள். அந்த ஆடம்பரச் சின்னங்களில் மிகவும் கண்ணைப்பறிக்கும் சிறப்புவாய்ந்தது ஜார் நான்காவது ஜான் என்ற மன்னன் சூட்டியிருந்த மணிமுடியாகும். அதில் இழைக்கப்பட்டிருக்கும் வைரக்கற்கள் அளவில் பெரியவையாகவும், அழகில் மிகச்சிறந்தவையாகவும் காட்சியளிப்பன. அவையெல்லாம் கோழி முட்டை வடிவில் செதுக்கப்பட்டு முடியில் பொருத்தப்பட்டிருக்கின்றன. அந்த முடியில் காணப்படும் சிவப்புக்கற்களும் பச்சைக்கற்களும் மட்டும் மிக அதிக விலைமதிப்புடையனவாகும். ஜார் ஜான் அலெக்ஸேவிச் என்ற மன்னன் சூட்டியிருந்த முடியும் அடுத்தபடி மிகச்சிறந்தவைகளுள் ஒன்றாகும். இறுதி ஜார் மன்னனை இரண்டாவது நிக்கோலஸ் அணிந்திருந்த மணிமுடி பதினெட்டாவது நூற்றாண்டில் செய்யப்பட்டதாகும். அதில் நீலநிறம் பாய்ந்த வெள்ளை வைரங்களும், நீண்ட சதுர வடிவம் வாய்ந்த வைரங்களும் ஒளிவீசுகின்றன. மிகப் பெரிய சதுரவடிவமான வைரம் நடுவே பதிக்கப்பெற்று, அதன்மேலே வைரக்கற்களாலான சிலுவை பொருத்தப்பட்டிருக்கிறது. அந்தச் சதுரவடிவான வைரக்கல், 1720 காரட் எடையும், 22,50,000 டாலர்கள் விலை மதிப்பும் கொண்டதாய் விளங்கிவருகிறது.

காண்போர் உள்ளத்தைக் கவரும் மற்றொரு ஆடம்பரச் சின்னம் ஜார் அலெக்ஸிஸ் மிச்சாயிலோவிச் என்ற மன்னன் கொண்டிருந்த அரியணையாகும். அந்த அரியணையில் 860 பெரிய வைரங்களும், 1225 மிகச்சிறந்த இலங்கைச் சிவப்புக்கற்களும், ரோஸா நிறமுள்ள பல முத்துக்களும் பதிக்கப்பெற்றிருக்கின்றன. அந்த அரியணை பர்சியா நாட்டில் இஸ்பாகன் என்ற இடத்தில் 1659-ம் ஆண்டில் செய்யப்பட்டதாகும். அதன் விலைமதிப்பு மட்டும் 30,00,000 டாலர்கள் ஆகும் என்று வல்லுநர்கள் கணக்கிடு

கின்றனர். ஜார் போரிஸ் கோடுனுவ் என்ற மன்னன் கொண்டிருந்த அரியணையும் பர்சியா நாட்டிலிருந்து செய்துகொண்டுவரப்பட்டதே யாகும். ஷா அபாஸ் என்ற பர்சியா மன்னன் கி. பி. 1604-ம் ஆண்டில் ஜார் மன்னனுக்கு நன்கொடையாக அளித்தான். ஜார் மன்னன் அதனைப் பெற்றுக்கொண்டு அளவிடமுடியாத பெருமகிழ்ச்சி பெற்றான்; அதன்மூலம் பர்சியா மன்னன் வர இருந்த கேட்டைத் தவிர்த்து, நட்புறவுகொண்டான். அந்த அரியணை உருவத்தில் மிகப்பெரியது; அது தங்கத்தால் செய்யப்பட்டு வைரக்கற்களால் இழைக்கப்பட்டிருக்கின்றது. ஜார் நான்காவது ஜான் கொண்டிருந்த அரியணை முழுவதும் தந்தத்தினால் செய்யப்பட்டு, அழகுச் சிற்பங்கள் பல அதில் செதுக்கப்பட்டிருக்கின்றன. அதன் பின்புறம் தங்கத் தகட்டால் இழைக்கப்பட்டு, 1325 சிவப்புக் கற்களால் பொருத்தப்பட்டிருக்கிறது. அதனுடைய மற்றைய பகுதிகள் தங்கத்தாலும், கரும்பச்சைக்கற்களாலும், சிவப்புக் கற்களாலும் இழைக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் பர்சியா மன்னன் ஒருவனால் வழங்கப்பட்ட பரிசேயாகும்.

மாபெரும் பீட்டர் என்ற ஜார் மன்னன் ஏந்தியிருந்த செங்கோல், முழுவதும் வைரத்தால் செய்யப்பட்ட இரண்டுதலைக் கழுகைத் தலைப்பூணாகக் கொண்டிருக்கிறது. 195 காரட் எடையுள்ள "ஆர்லவ்" என்ற பேர்போன வைரம் அதில் இழைக்கப்பட்டிருக்கிறது. அந்த வைரம் ஒரு காலத்தில் இந்தியாவில் ஒரு பிரம்மா சிலையில் பதிக்கப்பெற்றிருந்ததாம். ஜார் அலெக்ஸிஸ் மிச்சாலோவிச் ஏந்தியிருந்த செங்கோல், ஐரோப்பாவில் வல்லரசு நடத்திய பேரரசன் கான்ஸ்டன்டைன் ஏந்தியிருந்த செங்கோலைப்போல் செய்யப்பட்டதாகும். பேரரசன் கான்ஸ்டன்டைன் ஏந்தியிருந்த செங்கோல், இப்பொழுது இஸ்தான்பூல் என்ற இடத்தில், செயின்ட் சோபியா என்ற பகுதியில் வைத்துக் காப்பாற்றப்பட்டு வருகிறது.

இவை தவிர வைரங்களாலும், சிவப்புகளாலும், பச்சைகளாலும் இழைக்கப்பட்ட பத்து சிலுவைகளை ரஷ்ய அரசியலார் அப்படியே கண்காட்சிப் பொருள்களாக வைத்துக் காப்பாற்றி வருகின்றனர். அந்தச் சிலுவைகள் தனிப்பட்ட எவராலும் விலைக்குவாங்கமுடியாத அளவுக்கு அவ்வளவு விலையுயர்ந்தனவாக இருந்துவருகின்றன. மாஸ்கோவிலுள்ள கிரெம்லின மாளிகையின் அடியறைகளில் ஒன்றில் மறைந்து கிடந்த தங்கத்தினாலான மேஜையொன்று பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு கண்டெடுக்கப்பட்டது. ஜார் மன்னர்கள் புழங்கிவந்த தங்கத்தினாலான மெழுகுவத்தித் தண்டுகளும், தங்கத் தட்டுகளும் ஏராளமாகத் திரட்டி வைக்கப்பட்டிருக்கின்றன.

ஜார் மன்னர்கள் கொண்டிருந்த ஆடம்பரச் சின்னங்களுக்குப் பேச வாய் இல்லை; ஆனால், அவர்கள் எந்த அளவுக்குக் குடிமக்களைக் கொடுமைப்படுத்திக் கோலாகல வாழ்வில் வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதைத் தெளிவாக உணர்த்தவே செய்கின்றன.

இறந்தவர்களின் நூல்

பண்டை எகிப்தியர்கள் கொண்டிருந்த பல நூல்களுள் 'இறந்தவர்களின் நூல்' (The Book of the Dead) என்பது அவர்களால் மிகவும் போற்றிக் கொண்டாடப்பட்டதாகும். அந்த நூலின் சில பகுதிகள் பெர்லின் நகரத்தில் 'ராயல் காட்சிசாலை'யில் வைக்கப்பட்டிருந்தது. இறந்துபோனவர்களின் 'ஆன்மா' அமைதியும் இன்பமும் பெற செய்யவேண்டிய சடங்கு முறைகளைப்பற்றி விவரிப்பதே அந்நூல். அப்படிப்பட்ட மூடப்பழக்கவழக்கங்களில் பண்டை எகிப்தியர்கள் அசைக்கமுடியாத குருட்டு நம்பிக்கை கொண்டிருந்தனர். அந்த நூலை அவர்கள் 'பகலில் வெளிச்செல்லுதல்' என்னும் பொருள்படும் தொடரால் வழங்கிவந்தனர். மக்கள் இறந்தபின் செல்லும் மறு உலகத்திற்கு உரிய வழிகாட்டியாக அந்த நூலை அவர்கள் குருட்டுத்தனமாக நம்பியிருந்ததால், அதற்கு 'இறந்தவர்களின் நூல்' என்ற பெயர் பொருத்தமுடையது என்றே கூறலாம்.

அந்த நூலின் சில அதிகாரங்கள் கி. மு. 4266-ம் ஆண்டில் எழுதப்பட்டன என்று கூறுவர். அதன் பெரும்பகுதி கி. மு. 3000-க்கு முற்பட்டதென்றும், சில பகுதி பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தோன்றியதென்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுவார்கள்.

நினைவுத் திறன்

மனிதன் தன் வாழ்நாளில் எவ்வளவோ பொருள்களைப் பார்க்கிறான், அவைபற்றி கேட்டு அறிகிறான். பார்க்கப்படும் பொருள்களின் தோற்றங்களும், அவைபற்றி அறியும் கருத்துக்களும் அவ்வப்போது அவனது மூளையில் பதிவு செய்யப்பட்டு தேவையான சமயங்களில் வெளிப்படுகிறது. இவ்வாறு தான் அறிந்தவற்றை நினைவிலிறுத்திக்கொள்ளும் தன்மையையே நினைவுத்திறன் என்கிறோம். அறிந்தவற்றை பிறிதொருபொழுது நினைவிற்கு கொண்டுவர முடியாமற்போயின் அதை மறதி என்கிறோம்.

பெரும்பாலோர் மறதி என்னும் நோயினால் அல்லற்படுகிறார்கள். முக்கியமாக தேர்விற்கு நிற்கும் மாணவர்களிடையே இந்நோய் மிகவாகப் பரவி பெரிதும் வாட்டுகிறது. தாம் படித்த கருத்துக்களையெல்லாம் ஞாபகத்திற் கொள்ள முடியாது பலவற்றை மறந்துவிடுகிறார்கள்.

இந்நோயைத் தீர்த்து நல்ல நினைவுத்திறனைப் பெற வழி தேடுமுன் நினைவுத்திறன் இயங்குவது பற்றிய அடிப்படைக் கருத்தை அறிதல் வேண்டும். முதலில் நினைவு பற்றிப் பலர் கொண்டுள்ள சில தவறான கருத்துக்களை நீக்க வேண்டும்.

1. ஆழ்ந்த அறிவுபடைத்தவர்களிலும் ஒரு சிலர்தான் நல்ல நினைவுத்திறனைப் பெற்றிருக்கிறார்கள்.

இது தவறான கருத்தாகும். போதுமான அறிவு பெற்ற எல்லா அறிஞர்களும் நல்ல நினைவுத்திறனைப் பெற்றிருக்கிறார்கள். அத்திறனை உபயோகிக்க வழி தெரியாதவர்களுக்கே அது குறைவு எனக் கூறலாம்.

2. ஆண், பெண்ணைவிட அதிக நினைவுத்திறன் பெற்றவனாக இருக்கிறான்.

பெண்களே அதிக நினைவுத்திறன் பெற்றவர்கள்.

இரு கூற்றுக்களும் தவறானதாகும். அறிவியல் ஆராய்ச்சிகளின்படி இவற்றிற்குச் சிறிது கூட ஆதாரம் இல்லை. ஆண், பெண் இருபாலாரிடத்தும் நினைவுத்திறமை ஒரே அளவுதான் இருக்கிறது.

3. ஒருவன் தனது நினைவுத்திறனில் வளர்ச்சியைக் காணமுடியும்.

தவறாகும். நினைவுத்திறன் என்பது அடிக்கடி உபயோகப்படுத்துவதால் வளரும் தசையைப் போன்றதல்ல. அதைச் சரியான முறையில் உபயோகிப்பதெப்படி என்பதை அறிந்து கொள்வதே ஒருவன் செய்யக்கூடிய பெரிய காரியமாகும்.

4. ஒரு பொருளைப்பற்றி நல்ல நினைவுத்திறன் பெற ஒருவன் தனது முழுக்கவனத்தையும் தேவைக்குமேற்பட்ட நேரத்தையும் செலவிட்டால் போதும்.

இதுவும் தவறாகும். உண்மையில் இச்செயல் நினைவுத்திறனை அழிக்க உதவி செய்யும். இடையிடை நேரம் விட்டுப் பொருள்களை ஆராய்வதின் மூலம் நல்ல நினைவுத்திறனைப் பெறலாம்.

பொதுவாக ஒரு பொருளை நினைவில் கொள்வதும் அதைமறந்துவிடுவதும் இரு தன்மைகளைப் பொறுத்திருக்கிறது. முதலாவது கருத்தின் ஆழம். பொருள்களைப் பற்றி அறிகிற கருத்துக்கள் மனதில் ஆழப் பதிந்தால் அவை என்றும் நினைவில் நிலைத்து நிற்கும். இரண்டாவது சேர்க்கை வலிவாகும். ஒரு பொருளைப் பற்றி நாம் அறியும் கருத்துக்கள் முன்பே அறிந்த வேறு பலவற்றோடு இணைக்க அல்லது சேர்க்கப்படாவிட்டால் அக்கருத்துக்கள் நம் நினைவில் நிற்காது.

இதைச் சாதாரணமாக எல்லோரும் அறிந்து கொள்ளலாம். மூக்குக்கண்ணாடியைக் கழற்றி வைக்கும் ஒருவர் அதை வைக்கும் இடமாகிய அலமாரியின் இரண்டாவது தட்டு என்பதைக் கவனத்திற் கொண்டால், பின் மறுநாள் மூக்குக் கண்ணாடி என்ற நினைவு ஏற்பட்டவுடன், இமைப் பொழுதில்—அலமாரி—இரண்டாவது தட்டு—என்பதும் நினைவிற்கு வரும்.

மனிதனது மூளை ஒரு மிகப்பெரிய நூல்நிலையத்தைப் போன்று அமைந்துள்ளது. ஒரு நூல்நிலையத்தில் எப்படிப் புத்தகங்கள் இயல்வகை,

ஆசிரியர் பெயர், புத்தக எண் ஆகியவை குறித்துப் பிரிக்கப்பட்டு வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றனவோ அப்படியே மூளையின் பகுதிகளில் மனிதன் அறியும் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு வரிசையாக வைக்கப் பட்டிருக்கின்றன. இயல்வகை, எண் தெரியாத புத்தகத்தை நூல் நிலையத்தில் தேடுவது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினமாகும் சேர்க்கை வலிவில்லாத கருத்துக்களை மனிதன் நினைவில் நிலைநிறுத்திக் கொள்வது.

தாம் படித்தவற்றைத் திரும்ப நினைவிற்குக் கொண்டுவர இயலாது மறந்துவிடும் நிலையில் பலர் உள்ளனர். இதற்குக் காரணம், ஒன்று தாம் படிப்பதை எண்ணிப் பார்க்கச் சிறிதும் விருப்பமில்லாதவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். அல்லது படிப்பதையே புரிந்து கொள்ள முடியாத நிலையிலுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

படிக்கும்போது முழுக்கவனமும், படிக்கப்படும் பொருளின்பால் செலுத்தப்படாவிட்டால் படிப்பது மனதிற் பதியாது. எண்ணம் பிற பொருள்களின்மீது அலையும்போது, கண் பார்த்தபடி இருந்தாலும், வாய் உச்சரித்துக் கொண்டிருந்தாலும், படிக்கப்படும் பொருளின் கருத்துக்கள் மூளையில் ஏற்றுக்கொள்ளப்படாமல் நின்றுவிடுகின்றன. இது எல்லோராலும் உணரக்கூடியதாகும்.

முழுக் கவனத்துடன் படிக்கும்போது அறியப்படும் கருத்துக்கள் ஆழம் நிறைந்தவைகளாகிச், சேர்க்கை வலிவுபெற்று நினைவில் நிலைத்து நிற்கிறது. புரியாத நிலையில் படிக்கும்போது பொருளின் கருத்துக்கள் சேர்க்கை வலிவிழந்து மனதில் நன்கு பதியப்படாமல் போய்விடுகின்றன. ஆகவே அவை நினைவிற்கு வருவதில்லை.

மனப்பாடம் செய்யவேண்டிய பகுதிகளைப் படிப்பதற்கு படுக்கை செல்லுமுன் உள்ள நேரம் நல்ல நேரமாகும். ஏனெனில் படுத்தபின் உடலுறுப்புக்கள் ஓய்வுபெறுவதால் படுக்குமுன் படிக்கப்பட்ட கருத்துக்கள் தனிக் குவியலாக ஆழப் பதிய போதிய நேரம் கிடைக்கிறது. மனப்பாடப் படிப்பிற்கு முற்றிலும் மாறான நேரம் விடியற்காலையாகும். ஏனெனில் எழுந்தபின் உடலுறுப்புக்கள் இயங்க ஆரம்பிக்கின்றன. அல்லாமலும் புதிய, தொடர்பில்லா எண்ணங்கள் தோன்றிக் கருத்துக்கள் ஆழப் பதிந்து குவியலாக மாறுவதைத் தடுக்கின்றன.

மனிதன் பின்னால் செய்யப்படவேண்டிய பல வேலைகளை முன்கூட்டியே எண்ணி அதைச் செய்யக் காத்திருக்கிறான். நல்ல நினைவுத் திறனைப் பெற்றவர்கள் அதனைப் பயன்படுத்தி வேலைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்ய முற்படுகின்றனர்.

நினைவுத்திறனில் நம்பிக்கை வைக்காமல் பிற்பட்டுச் செய்யவேண்டிய முக்கிய வேலைகளைத் தமது நாட்குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளும் பழக்கத்தை மேற்கொண்டு பயனடைவோர் இன்று பலர் இருக்கின்றனர். ஒவ்வொரு நாளும், அன்றன்று செய்யப்பட வேண்டிய வேலைகளை காலையில் எழுந்தவுடன் புத்தகத்தைப் பார்ப்பதன் மூலம் அறிவுறுத்தப்படுவதால் அவ்வேலைகள் மறதியில்லாமற் செய்யப்படுகின்றன.

நினைவுத்திறனை எல்லோரும் பெற்றிருந்தும் மிகப்பலர் அதனைப் பயன்படுத்தும் முறைகளையறியாது அல்லது அறிய எண்ணமில்லாது விட்டுவிடுகின்றனர். ஒருசிலரே சரியான வழிகளில் அதன் முழுப்பயனையும் அடைய முயற்சிக்கின்றனர்.

ஆண்டவனும் பகுத்தறிவும்

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

நமது கடவுள் மக்களால் செய்யப்பட்டவராவார்! நமது கடவுள் காட்டுமிராண்டிகளால் செதுக்கப்பட்டவராவார்! அவர்களால் எந்த அளவுக்குச் செய்ய முடிந்ததோ அந்த அளவுக்குச் செய்தார்கள்! அவர்கள், அவர்களைப் போலவே நமது கடவுளைச் செய்தார்கள்; அவருக்கு அவர்களுடைய உணர்ச்சிகளையே கற்பித்தார்கள்; அவர்களுடைய சரியான—தவறான கருத்துக்களை எல்லாம் அவர்மேல் ஏற்றினார்கள்!

மனிதன் முன்னேற முன்னேறத் தன் கடவுளையும் மாற்றிக்கொண்டான்; நாளடைவில் அவர் இதயத்திலிருந்த மூர்க்கத்தனத்தைக் கொஞ்சம் எடுத்தான்; அன்பு தவழும் ஒளியை அவர் கண்களில் ஏற்றினான். மனிதன் மேலும் வளர வளர, அவனது நோக்கம் பரந்து விரிந்தது; அறிவின் எல்லையும் அகன்றது. மீண்டும் அவன் தன் கடவுளை மாற்றிக் கொண்டான்; அவனால் கடவுளை எவ்வளவு முழுமைத்தன்மையராக ஆக்க முடிந்ததோ, அவ்வளவு முழுமைத்தன்மையராக ஆக்கினான். என்றாலும், இந்தக் கடவுளும், அவரை ஏற்படுத்தியவர்களின் சாயலையே கொண்டிருந்தார். மனிதன் நாகரிகம் அடைய அடைய, அவன் அருளுடையவனாக வளர்ந்தான்; நீதியை விரும்பத்தொடங்கினான்; அவனது உள்ளம் விரிய விரிய அவனது எண்ணமும் தூய்மை யடைந்தது, சிறந்து விளங்கிற்று; ஆகவே அவனது கடவுளும் அவனைப்போலவே அருளுடையவராகவும், அன்புடையவராகவும் வளர்ந்தார்!

நமது நாட்களில் ஜெஹோவா மறைந்து விட்டார். அவர் முழுமைத்தன்மை நிரம்பியவராகக் கருதப்படுவதில்லை. இப்பொழுதெல்லாம், மதவாதிகள், ஜெஹோவாவைப் பற்றிப் பேசுவதில்லை; ஆனால், அன்பான கடவுளைப் பற்றியும், முதலிறுதியற்ற எல்லையில்லாத் தந்தையைப்பற்றியும், நிலையான நண்பரைப் பற்றியும், மனிதனின் நம்பிக்கைக்குக் கொள்கலமானவரைப்பற்றியுமே பேசுகிறார்கள். ஆனால், அவர்கள் அன்பான கடவுளைப்பற்றிப் பேசும்போதுதான், பெரும் புயற்காற்றுகள் அழிவையும் பாழையும் உண்டாக்குகின்றன; நில அதிர்ச்சி உயிரினங்களை விழுங்குகிறது; வெள்ளப் பெருக்கு பேரழிவை உண்டாக்குகிறது; பேரிடி முகிலிலிருந்து விழுந்து மக்களின் உயிரை வவ்வுகிறது; பிளேக்கும் காய்ச்சலும், சாவு என்னும் வயலில், இடைவிடாமல் அறுவடை அறுத்துக்கொண்டேயிருக்கின்றன!

அவர்கள், இப்பொழுது கூறிவருகிறார்கள், எல்லாம் நன்மைக்கே என்று. தீமை மாறு உருவில் நலம்புரிவதற்காக வந்த நன்மை என்றும், துன்பம் ஏற்றல் மக்களுக்கு வலிவையும், வளத்தையும் உண்டாக்கும் என்றும், அதுவே பண்பை உருவாக்குகிறது என்றும், அதே நேரத்தில் மகிழ்ச்சி நலிவையும், தாழ்வையும் தருகிறது என்றும் கூறிவருகிறார்கள். இது உண்மையாக இருக்குமேயானால், நரகத்தில் கிடக்கும் ஆன்மாக்கள் எல்லாம் உயரிய நிலைக்குப் போகவேண்டும்; மோட்சத்திலிருக்கும் ஆன்மாக்களெல்லாம் வாடி வதங்கவேண்டும்!

ஆனால், நாம், நல்லது நல்லதே என்பதை அறிவோம். நாம், தீது நல்லது அல்ல என்பதையும், நல்லது தீது அல்ல என்பதையும் அறிவோம். நாம், ஒளி இருள் அல்ல என்பதையும், இருள் ஒளி அல்ல என்பதையும் அறிவோம். ஆனால், நாம் அறிவோம், நன்மையும் தீமையும், இயற்கைக்கு மீறிய ஆற்றலான

ஆண்டவனால் திட்டமிடப்பட்டு, உண்டாக்கப்பட்டவை அல்ல என்பதை. அவை இரண்டையும் அவசியத்தி. பாற்பட்டவைகளாகவே நாம் கருதுகிறோம். நாம் அவற்றிற்காக வாழ்த்துப்பாடுவதுமில்லை, வசைபொழிவதுமில்லை. நாம் அறிவோம், சில தீமைகளை அகற்றிவிட முடியும் என்பதையும், நன்மையைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்பதையும். நாம், மூளையை வளர்ப்பதன் மூலமும், அறிவைப் பெருக்கிக்கொள்வதன் மூலமும் இதனைச் சாதித்துக்கொள்ளலாம் என்பதை அறிவோம்.

கிருஸ்தவர்கள் எப்படித் தங்களது கடவுளை மாற்றிக்கொண்டிருக்கிறார்களோ, அப்படியே, அவர்கள் தங்களது பைபிளையும் மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். நடக்கமுடியாதவைகளையும், அபத்தமானவைகளையும், கொடுமையானவைகளையும், மதிப்புக் தாழ்ந்தவைகளையும் அப்பாற் தூக்கி எறிந்துவிட்டு, எப்படியேனும் கடவுள் அருளிய வேதத்தைக் காப்பாற்றிக்கொண்டால் போதும், என்ற அளவுக்கு, ஆயிரக்கணக்கானவர்கள் வந்துவிட்டார்கள். ஆனாலும் பழுத்த பழமை விரும்பிகள் அதனுடைய ஒவ்வொரு சொல்லையும் பற்றிக்கொண்டு நிற்பதோடு, அதன் ஒவ்வொரு வரியையும் உண்மையென்றே நம்பிக்கொண்டிருக்கத்தான் செய்கின்றனர். வெறும் படிப்பாளர்கள் சிலர் இருக்கிறார்கள். பைபிள் என்ன சொல்லுகிறதோ அதுதான் அவர்களுக்கு பைபிள். அவர்கள் விளக்கவுரையேதும் வேண்டமாட்டார்கள். விளக்கவுரை செய்வோரைப் பற்றி அவர்களுக்குக் கவலையேயில்லை. முரண்பாடுகள் அவர்களுடைய பக்தியை அசைத்துவிடமுடியா. எந்தவித முரண்பாடுகள் இருப்பதையும் அவர்கள் மறுத்துரைப்பார்கள். அவர்கள் அந்தப் புனித வேதத்திற்குப் பணிந்து அதனோடு ஒட்டியே நிற்பார்கள்; அவர்கள், அதற்குச் சிறிதளவு தத்துவார்த்த விளக்கமே கொடுப்பார்கள். ஒரு மதிப்பிற்குரிய பெரியவர் குழந்தைகளை உடையவராக இருக்கிறார் என்ற காரணத்துக்காகவே, அவருக்குக் குடியிருக்க இடமளிக்க மறுக்கும், பல கட்டுகளை உடைய வீட்டுக்கு வாடகை வசூலிப்பவனைப் போன்றவர்கள் அவர்கள். "ஆனால், என்னுடைய மக்கள் இருவரும் மணம்புரிந்துகொண்டவர்கள். அவர்கள் தனியே அயோவாவில் வாழ்கிறார்கள்" என்று அந்தப் பெரியவர் சொல்கிறார். அதற்கு அந்த வீட்டுவாடகை வசூலிப்பவன், "அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை; குழந்தைகளையுடைய எவருக்கும் வீட்டை வாடகைக்கு விடக்கூடாது என்பதே, எனக்கிடப்பட்டிருக்கும் கட்டளையாகும்" என்று கூறுகிறான். இதைப் போன்றதுதான் அந்தப் பழமைவிரும்பிகளின் நிலையும்.

வைதிக மதக் கோவில்கள் எல்லாம், முன்னேற்றம் என்னும் நெடுவழியின் குறுக்கே, போடப்பட்டிருக்கும் தடைக்கற்களாகும். ஒவ்வொரு வைதீகக் கொள்கையும் ஒரு இருப்புச் சங்கிலியாகும்; ஒரு இருட்டறையாகும். "கடவுளருளிய அந்த வேதத்தில்" நம்பிக்கை கொண்டுள்ள ஒவ்வொரு நம்பிக்கையாளனும் ஒவ்வொரு அடிமையாவான். அவன் பகுத்தறிவை அதன் அரியணையினின்றும் விரட்டியடித்துவிட்டு, அதற்குப் பதிலாக அச்சத்திற்கு முடிசூட்டியிருப்பவனாவான்.

பகுத்தறிவு மூளையின் ஒளியாகும்; செஞ்ஞாயிறாகும். அதுதான் உள்ளத்தைச் சுற்றி அளவிடும் அளவுகருவியாகும்; நிலைத்து நிற்கும் வடமீன் (நட்சத்திரம்) ஆகும்; மேகக்கூட்டங்களையெல்லாம் தாண்டிக்கொண்டு, வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் மலைமுகடாகும்!

சோழர் நீதிமுறைபற்றிச் சீன ஆசிரியர்

சோழர் நீதிமுறை பற்றிப் பதின்மூன்றாவது நூற்றாண்டினரான சௌ-ஜு-குவா என்னும் சீன ஆசிரியர் எழுதிவைத்துள்ள குறிப்பு ஒன்று கூறுவதாவது:

"குற்றம் புரிந்தோரை அமைச்சர்கள் தண்டிக்கின்றனர். குற்றம் அற்பமாயிருந்தால், குற்றவாளி ஒரு மரத்தூணில் கட்டப்பட்டுக் கோலால் 50, 70 அல்லது 100 அடிகள் அடிக்கப்படுவான். பெரும் பிழைகள் செய்தவர் தலை வெட்டப்படுவர்; அல்லது யானைக் காலால் தலை இடறப்படுவர்."

குதிரையைப் பூட்டு தேரை ஓட்டு!

[எழினி]

"உன்னை விட்டுப் பிரியமாட்டேன், பிரிந்தால் உயிர் வாழமாட்டேன்" என்றுதான் அக்கொஞ்சுமொழியாளுடன் காதல்மொழி பேசி வருகிறான் அக்கட்டிளங்காளை. அவன் காதலன்பிலே நம்பிக்கை வைக்கிறாள் அப்பூங்கொடியாள். களவொழுக்கம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. தங்களது நடவடிக்கைகளை ஊராரும், உறவினரும் அறியமாட்டார்கள் என்ற எண்ணத்திலேயே அவர்கள் களவின்பம் நுகர்ந்துவருகிறார்கள்.

தலைவனும் தலைவியும், இரவுவேளைகளில்; தாங்கள் ஒருவரையொருவர் தனியாகக் காண்பதற்கான குறியிடங்களை ஏற்படுத்திக்கொண்டு, நாள் தவறாமல் கண்டுவருகிறார்கள். தலைவன், தன்னை மணந்துகொள்ளப்போகிற மணாளன் தானே, என்ற முறையில், அவனது உறுதிமொழியில் நம்பிக்கைவைத்து அவனை அடிக்கடி காண்பதிலே அளவற்ற மகிழ்ச்சி கொள்கிறாள் அத்தலைவி. தலைவனும் தலைவியும் தங்களுக்குள்ளே நிகழும் ஒழுக்கத்தை எவ்வளவோ களவாக வைத்துக் காப்பாற்றி வந்தாலும், அதனை எப்படியோ வெட்டிப்பேச்சுப் பெண்டிர்கள் சிலர் அறிந்துவிடுகிறார்கள்; அலர்* தூற்றக்கிளம்பிவிடுகிறார்கள். தங்கள் களவொழுக்கத்தை ஊரிலே உள்ள சிலர் அறிந்துவிட்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்ட தலைவன், அச்சமும் வெட்கமும் தாக்கத், தலைவியைக் காணவருவதை நிறுத்திக்கொள்கிறான்.

தன்னைப்பற்றி ஊரில் அலர் கிளம்பிவிட்டது என்பதைத் தலைவி அறிந்துகொண்டு அச்சமுற்றாளேனும், ஊராரின் இழிச்சொல்லும் பழிச்சொல்லும், தலைவன் தன்னை மணந்துகொள்ளுகிற காலம்வரையில்தானே நடைபெறும், தலைவன்தான் விரைவில் மணந்துகொள்ளப்போகிறானே, பிறகு யார் என்ன சொல்ல முடியும் என்று தலைவி தனக்குள்ளாகவே எண்ணி ஆறுதல் பெற்றுக்கொள்கிறாள். தலைவன் கைவிடமாட்டான் என்ற நம்பிக்கையில் அவள் உறுதிபூண்டிருக்கிறாள். ஒருநாள், இரண்டுநாள், மூன்றுநாள் என்று இப்படியாக நாட்கள் கழிகின்றன; தலைவி குறியிடம் போய்ப் போய்த் திரும்பிவருகிறாள். தலைவனுக்கு என்ன நேரிட்டதோ என்று எண்ணி ஏங்குகிறாள்; ஊராரின் அலருக்கு அஞ்சி, தலைவன் தன்னைக் கைவிட்டுவிட்டான் என்று உணர்கிறாள்; வெட்கமும் வேதனையும், அச்சமும் அழுகையும் அவளது மனக்கோட்டையைத் தகர்த்தெறிகின்றன. தோழி தலைவியை எவ்வளவோ தேற்றிப் பார்க்கிறாள். தலைவியின் வேதனையை அவளால் துடைக்க முடியவில்லை. தலைவனைப் போய்க் கண்டு, அவனை எப்படியேனும் அழைத்துக்கொண்டு வருவதாகவும், அதுவரையில் பொறுத்திருக்கும்படியாகவும் தோழி தலைவிக்கு ஆறுதல்மொழி கூறுகிறாள். தோழி சென்றுவர, தலைவி ஒருவாறு மனம் ஒருப்பட்டுத், தோழியை வழியனுப்பிவைக்கிறாள்.

தோழி தலைவனது இருப்பிடம் நோக்கிச் செல்கிறாள். போகும் வழியில் கடலும், கடல் சார்ந்த இடமுமாகிய நெய்தல் நிலக் காட்சிகளைக் கண்டுகொண்டே செல்கிறாள். அங்குக் கருமையான பூக்களைப் பூக்கச் செய்யும் கழிமுள்ளியும், தில்லையும் சூழ்ந்துவளர்ந்துகிடக்கக் காண்கிறாள். முள்ளுடைய கழிமுள்ளியும்,

* அலர் தூற்றல் என்பது தலைவன் தலைவியர்க்கிடையே நிகழும் களவொழுக்கத்தை ஊரிலுள்ள முதுபெண்டிர் காதொடு காதாக வைத்துக் குசுகுசுவென்று ஊர் முழுதும் வெளிப்படுத்துதலாகும்.

நச்சுத்தன்மைகொண்ட தில்லையும் அங்குச் சூழ்ந்துகிடப்பது, ஊரில் அலர் கூறுகின்ற பெண்கள் தலைவியைச் சுற்றிச் சூழ்ந்திருப்பதை அவளுக்கு நினைவுபடுத்துகிறது. கடலினது அலைகள் கொண்டுவந்து ஒதுக்கிய மணலைக், காற்று கொண்டுவந்து மேடாகக் குவிக்க, அதில் தாழை மரங்கள் வளர்ந்திருக்கின்றன. தாழங்காய்கள் காய்த்துத் தொங்குகின்றன. ஆலமரத்தடியில் உட்காரும் தவசி தன் முன்னே வைக்கும் நீர்நிறைந்த குண்டிகைப்போல, அந்தத் தாழங்காய்கள் காணப்படுவதைப் பார்க்கிறாள். அந்தத் தாழை மரத்தில் பறவைகள் பலவும் வந்து உட்காருவது, அந்தத் தாழைமரம் பூத்துக் காணப்படுவதுபோல் அவளுக்குத் தோன்றுகிறது. உயிர்க்கொலை புரிவதிலே கண்ணுங் கருத்துமாக இருக்கும் பறவைகள், நல்ல தாழைப் பூக்களாகக் காணப்படுவது தலைவிக்குத் தீங்கு இழைக்கும் தலைவன், பிறர்க்கு நல்லவனைப்போல் தோன்றுகின்ற தன்மையை அவளுக்கு நினைவுபடுத்துகிறது. அங்கு அவள் காணும் ஒவ்வொரு காட்சியும், தலைவிக்குத் தலைவன் இழைத்த கொடுமைகள் பற்றிய நினைவாகவே காட்சி அளிக்கின்றன.

மாலைப்பொழுதில் கடற்கரை ஓரத்தில் தன்னந்தனியே உலாவிக்கொண்டிருக்கும் தலைவனைத் தோழி கண்டுபிடிக்கிறாள். தோழி தன்னை நோக்கிவருவதைக் கண்டு தலைவன் சிறிது வெட்கப்படுகிறான். கடலைநோக்கிப் பார்த்த வண்ணம் நிற்கிறான். தோழி அருகில் சென்று, "தலைவனே! நெய்தல் நிலத்திற்கு உரிமையுடையவனே!" என்று அழைக்கிறாள். தலைவன் திரும்பிப் பார்க்கிறான். அவளுடன் என்ன பேசுவதென்று தெரியாமல் திகைப்புற்று நிற்கிறான். குற்றமுள்ள நெஞ்சு அவனைக் குடைந்துகொண்டிருக்கிறது.

"நலந்தானே?" என்று கேலிக்குரலில் கேட்கிறாள் தோழி. அதற்கு அவன் "ஆம்!" என்று விடையிறுக்கிறான்.

"தலைவனே! நீதான் நலமெலாம் செறிந்தவனாயிற்றே! ஆற்றுதல்—போற்றுதல்—பண்பு—அன்பு—அறிவு—செறிவு—நிறை — முறை — பொறை முதலிய அரும்பண்புகளின் பொருளை உணர்வாயல்லவா?" என்று தோழி வினவுகிறாள்.

தோழி தன்னைக் கேலிசெய்கிறாள் என்று நினைத்த தலைவன், "எனக்கொன்றும் தெரியாது! அவற்றைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை!" என்று கூறுகிறான்.

"ஆற்றுதல் என்றால் என்ன? சிந்தித்துப் பார்!" என்று தோழி மீண்டும் கேட்கிறாள்.

"நீதான் சொல், பார்க்கலாம்!" என்று தலைவன் கூறுகிறான்.

"ஆற்றுதல் என்பது இல்வாழ்க்கை நடத்துதல். இல்வாழ்க்கை நடத்துதல் என்பதாவது, வறியவர்களுக்கு ஏதேனும் ஒன்றைக் கொடுத்துதவும் தன்மையாகும்" என்று தோழி விளக்கந்தருகிறாள்.

"போற்றுதல் எனப்படுவது எது?" என்று தலைவன் தோழியை வினவுகிறான்.

"போற்றுதல் எனப்படுவது ஒன்றைப் பாதுகாத்தல். ஒன்றைப் பாதுகாத்தலாவது, கூடினவர்களை எக்காரணங் கொண்டும் பிரியாதிருத்தலாகும்."

"நீ குறிப்பிடும் பண்பிற்கு என்ன பொருள்?"

"பண்பு எனப்படுவது மக்கட் பண்பைக் குறிப்பது. மக்கட் பண்பாவது, உலகவொழுக்கம் அறிந்து ஒழுகுதலாகும்."

"அன்பு என்று குறிப்பிட்டாயே, அதன் பொருள் என்ன?"

"அன்பு என்றால் உனக்குத் தெரியாதா? அன்பு என்று சொல்லப்படுவது, தம் உறவினர் நிலை கெடாது பார்த்துக்கொள்ளும் பண்பாகும்."

"அறிவு என்பதற்கு என்ன பொருள் கூறுகிறாய்?"

"அறிவு எனப்படுவது எது என்று கேட்கிறாய்? அறிவு என்று சொல்லப்படுவது, அறியாதவர்கள் தன்னைப் பார்த்துச் சொல்லும் சொல்லை ஒருவன் பொறுத்துக்கொள்வது என்பதாகும்."

"சரி! செறிவு என்று எதைக் குறிப்பிடுகிறாய்?"

"செறிவு எனப்படுவது, ஒருவன் தான் கூறிய சொற்களினின்றும் வழுவாதிருத்தலாகும்."

"நிறை எனப்படுவது எது?"

"நிறை என்றால், மறைவாகக் கொள்ளவேண்டிய ஒன்றைப் பிறர் அறியாமல் கொண்டொழுகும் தன்மையாகும்."

"முறை என்று கூறினாயே, அதன் பொருள் என்ன?"

"முறை என்று சொல்லப்படுவது, உறவினர்கள் என்று கண்ணோட்டங் காட்டாது, அவர் செய்த குறைகளுக்கு ஏற்ப அவர்களது உயிரை வாங்கவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டால், அவ்வாறே வாங்கிவிடுவது."

"பொறை என்பதற்கு என்ன பொருள்?"

"பொறை என்று சொல்லப்படுவது, பகைவரைக் காலம் வரும் அளவும் பொறுத்துக் கொண்டிருத்தலாகும்."

தோழியின் விளக்கத்தையெல்லாம் கேட்டுக் கொண்டே இருந்த தலைவன், மேற்கொண்டு என்ன கேட்பதென்றோ, அல்லது அவள் விளக்கத்திற்கு என்ன மாற்றந்தருவது என்றோ தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கிறான்.

"நான் கூறியவற்றையெல்லாம் நீ நன்றாய் அறிகிறாயல்லவா?" என்று தோழி வினவுகிறாள்.

"எல்லாம் நன்றாய்ப் புரிகிறது!" என்கிறான்.

"நான் கூறியவாறு, நீயே அறிந்து ஒழுகுவாயாயின், அவ்வொழுக்கத்திற்கு ஏற்ப ஒன்று கூறுவேன்", என்கிறாள்.

அதுகேட்ட தலைவன் "அது என்ன?" என்று உசாவுகிறான்.

"எனது தோழியாகிய தலைவியது நலத்தை நீ நன்கு நுகர்ந்துவிட்டுப், பின்பு அவளைத் துறந்துவிட்டு இங்கு வந்திருத்தல் இருக்கிறதே, அது, இனிமையான பாலை உண்ணுபவர்கள், பாலையுண்டு, பிறகு அதனைக் கொண்டிருக்கும் கலத்தைக் கவிழ்த்துவிடுதல் போல்வதாகும்! அப்படி நடந்துகொள்வது பண்பல்ல. ஆகையினாலே, உன்னைவிட்டுப் பிரிந்து வருந்துபவளின் துயரத்தை, நீ மணம்செய்துகொள்வதன்மூலம் நீக்குவாயாக!" என்று தோழி கூறுகிறாள்.

தோழி தனக்கு அறிவுரை கூறும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டதுகண்டு தலைவன் தனக்குள்ளேயே வெட்கப்பட்டுக்கொள்கிறான். "இப்பொழுது என்னை என்ன செய்யச்சொல்கிறாய்?" என்று கனிவுள்ளத்தோடு தோழியை வினவுகிறான்.

அதற்குத்தோழி, "தலைவியது துன்பத்தைக் களைய, தேரிலே குதிரையைப் பூட்டு; தலைவியின் இருப்பிடம் நோக்கி ஓட்டு!" என்று கூறுகிறாள்.

தலைவன் தேரினைப் பூட்டிப் புறப்படுகிறான்; தோழியும் புறப்படுகிறாள்.

ஃ ஃ ஃ

இது நெய்தற்கலியின் 16-வது செய்யுளில் வந்துள்ள கருத்தை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட சொல்லோவியமாகும். நெய்தற் கலியைப் பாடியவர் அந்துவனார் என்ற பெரும் புலவராவார். அவரை நல்லந்துவனார் என்றும், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் என்றும் அழைப்பர். அவரை மருதனிளநாகனார் என்ற புலவர் அகநானூற்றுப் பாடலொன்றில் சிறப்பாகக் குறிப்பிடடுள்ளார். அவரை ஒழுக்கச் சிறப்பும், கல்வி மேம்பாடும் உடையவர் என்று பலரும் போற்றிப் புகழ்வார்கள். பிரிவாற்றாமையால் தலைவி வருந்துவது இச்செய்யுளில் சிறப்பாக உணர்த்தப்பட்டதால், இச்செய்யுள் நெய்தல் திணைக்குரியதாகக் கொள்ளப்பட்டது. தலைவனைத் தோழி திருத்தும் பாங்கும், அவனுக்கு அறிவுரை கூறும் பான்மையும் மிக நயம்படவும், அழகுபடவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஃ ஃ ஃ

மாமலர் முண்டகம் தில்லையோ(டு) ஒருங்குடன்
கானல் அணிந்த உயர்மணல் எக்கர்மேல்
சீர்மிகு சிறப்பினோன் மரம்முதல் கைசேர்த்த
நீர்மலி கரகம்போல் பழம்தூங்கும் முடத்தாழைப்
பூமலர்ந் தவைபோலப் புள்அல்கும் துறைவ'கேள்;

ஆற்றுதல் என்ப(து) ஒன்று அலந்தவர்க்(கு) உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்(பு)எனப் படுவது பா(டு)அறிந்(து) ஒழுகுதல்
அன்(பு)எனப் படுவது தன்கிளை செறாஅமை
அறி(வு)எனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறி(வு)எனப் படுவது கூறியது மறாஅமை
நிறைஎனப் படுவது மறைபிறர் அறியாமை
முறைஎனப் படுவது கண்ணோடா(து) உயிர்வௌவல்
பொறைஎனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்;

ஆங்(கு) அதை அறிந்தனி ராயி(ன்)என் தோழி
நன்னுதல் நலன்உண்டு துறத்தல் கொண்க
தீம்பால் உண்பவர் கொள்கலம் வரைதல்
நின்தலை வருந்தியாள் துயரம்
சென்றனை களைமோ பூண்கநின் தேரே.

[நெய்தற்கலி—16]

[மா - கருமை; முண்டகம் - கழிமுள்ளி; கானல் - காடு; அணிந்த உயர்மணல் எக்கர்மேல் - திரையிட்ட மணல்மேலே. காற்றாலுயர்ந்த மணல் மேட்டில்; சிறப்பிலேன் - தவசி; மரமுதல் - ஆலமரத்திடத்து; கைசேர்த்த - தூக்கிவைத்த; நீர்மலி - நீர்நிறைந்த; கரகம்போல் - குண்டிகைபோல்; தூங்கும் - தொங்கும்; முடத்தாழை - வளைந்த தாழைமரம்; புள் - பறவை; அல்கும் - தங்கும்; செறாஅமை - கெடாதிருத்தல்; நோன்றல் — பாதுகாத்தல்; மறாஅமை — பிறழாமை; கண்ணோடாது - தாட்சண்யம் பாராது; நன்னுதல் — அழகிய நெற்றி; கொண்க — நெய்தல்நிலத் தலைவ; நின்தலை — நின்னிடத்து; தீம்பால் - இனிய பால்.]

★★

அஞ்சி ஒளிந்த ஆண்டவர்கள்!

இடைக்காலத்தில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த செம்பொனார் கோயிலிலிருந்த மூலக்கடவுள் சிலையும், நாயன்மார்கள் சிலைகள் உள்பட ஏனைய சிலைகளும், சிலகாலம் திருவிடைக்கழிப் பிள்ளையார் கோயிலில் கொண்டுபோய்ப் பதுக்கவைக்கப்பட்டிருந்தனவாம். இந்தச் செய்தியைச் செம்பொனார் கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

சோழமண்டலத்தை இராசாதிராசன் ஆண்டபொழுது, அவனது 11-வது ஆட்சி ஆண்டில், "துரிதகாலமாய்ப் படையேறிய" படியால், கடவுளர் சிலைகள் தாக்குதல்களுக்கு ஆளாகாமலிருக்க அகற்றப்பட்டன. இராசாதிராசனுக்குப்பின் ஆட்சிக்குவந்த மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியின் 6-வது ஆண்டில் மீண்டும் கடவுளர் சிலைகள் பதுக்கப்பட்ட இடத்திலிருந்து அதனதன் இடத்திற்குக் கொண்டுபோகப்பட்டன. ஈழப்படை சோழநாட்டைத் தாக்கியதுதான் இத்தகைய படையேறு குழப்பமாக அமைந்தது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். அஞ்சி ஒளிந்துதான் அக்காலத்திலும் ஆண்டவர்கள் வாழ முடிந்திருக்கிறது!

அண்டசராசரம்—

ஆமை முதுகின்மேல்!

[இரா. செழியன்]

வானளாவிய கட்டிடம்! எண்ணிலடங்காத மாடி அடுக்குகள்! பார்ப்போர்க்கு மலைப்பை யும், வியப்பையும் தரும் விதத்தில் அந்த மாளிகை இருக்கிறது.

மாளிகையின் அளவையும், பெருமையையும் பார்க்கும்பொழுது அதைக் கட்டி முடித்தவன் பெரியதொரு திறமைசாலியாகத்தான் இருக்க வேண்டும். பெரும் மாளிகை! அற்புதமான அமைப்பு! விதவிதமான வேலைப்பாடுகள்! இவைகளையெல்லாம் திட்டமிட்டு, திட்டமிட்ட படி செய்துமுடிப்பதென்றால், அதற்கு ஆற்றல் அதிகம் இருந்திருக்கவேண்டும்.

மாளிகையைப் பார்த்து வியக்கும் பொழுது, அதன் அருமை பெருமைகளை நினைத்து மகிழும்பொழுது, இவ்வளவு பெரிய மாளிகையைத் தாங்க, எவ்வளவு கனமான அடிப்படை தோண்டப்பட்டது? அடிப்படையை பாறை யைக் குடைந்துப்போட்டார்களா? இந்த மாளிகையில் எவ்வளவு மாடிகள் இருக்கின்றன? ஒவ்வொன்றின் அமைப்பு, உயரம், அளவு இவைகள் எவ்வளவு? ஒரு மாடியிலிருந்து மற் றொரு மாடிக்குப்போக வழி என்ன? இது போன்ற கேள்விகள் எழும். அக்கம்பக்கத்தி லுள்ளவர்களை, மாளிகையில் ஒரு மாடியில் இருந்து வருபவர்களைக் கேட்டால் சரியான பதில்கள் கிடைப்பதில்லை. சிறுசிறு அளவே தான் சொல்லமுடியுமேயன்றி, அந்தப் பெரிய மாளிகையின் முழுவிவரங்களை யெல்லாம் சொல்லமுடிவதில்லை. எல்லா விவரங்களையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், கட்டிடத் தையே கட்டி முடித்த கட்டிட நிபுணரை (என்ஜினியரை)க் கேட்டால் தெரிந்துவிடும். கட்டிடத்தின் அமைப்புகளை விளக்கி, அவர் தீட்டிய திட்டங்களை, வரைந்த படங்களை, தங் குள்ள குறிப்புகளைப் பார்த்தால், கட்டிடத் தின் அளவுகளெல்லாம் நன்கு தெரியும். ஒரு கட்டிடத்தின் அமைப்புகளைத் தெரிந்து கொள்ள இதைவிடச் சரியான வழி வேறெது வும் இருக்கமுடியாது.

ஒரு அற்புதமான இயந்திரம் வேலை செய்கிற தென்றால், அதன் அமைப்பு, வேலை செய்யும் விதம் இவைகளைப் பற்றித், தெரிந்துகொள்ள, அதை உண்டாக்கிய பொறியியல் நிபுணனைத் தவிர வேறு சிறந்தவர் யாரும் இருக்கமுடியாது. ஒரு பொருளைச் செய்துமுடித்தவனுக்கு அதன் விவரங்கள் நன்கு தெரியும்.

ஒரு மாளிகையைப் பார்த்தால் உண்டாகிற மலைப்பைவிடப் பன்மடங்கு அதிகமாக—ஒரு அற்புத இயந்திரம் வேலைசெய்வதைப் பார்க்கும் பொழுது உண்டாகிற ஆச்சரியத்தைவிடப் பன்மடங்கு அதிகமாக, இந்த உலகத்தின் அமைப்பைப் பார்க்கும்பொழுது வியப்பும், மலைப்பும் ஒவ்வொருவருக்கும் உண்டாகும்.

மண்ணுலகத்தைச் சுற்றிப் பார்க்கும் பொழுது எவ்வளவு விநோதங்களும், அருமை பெருமைகளும் காணப்படுகின்றன! உயர்ந்த மலைகள், நீண்ட ஆறுகள், அடர்ந்த காடுகள், பரந்த கடல்கள், பலவகையான புல் பூண்டுகள், செடிகொடிகள், மரங்கள், தோட்டங்கள்! உயிர்வகைகளில்தான் எவ்வளவு பிரிவுகள், வேறுபாடுகள்! நெளிந்து செல்கிற சிறு மண் புழுவிலிருந்து நிமிர்ந்து நடக்கிற மனித ஜாதிவரை, குண்டுமணியளவுள்ள சிறு பூச்சி களிலிருந்து குன்றுபோல அசைந்துவரும் மத யானைகள்வரை, தத்திவரும் கோழிக்குஞ்சி லிருந்து கொத்திவரும் பெரும் கழுகுகினங்கள் வரை பல்லாயிரக்கணக்கான உயிர்வகைகள்! அவைகளின் அமைப்பும்,வாழும்விதமும் சொல் லுந்தரமன்று! கல்லினுள் இருக்கிற தேரை, கருப்பையினுள்ளிருக்கிற முட்டை, கடலில் சுழலுகிற மீன் காட்டில் உலவுகிற மிருகங்கள் எல்லாம் இருக்கின்றன! குருவி கட்டுகிற கூடு, சிலந்தி பின்னுகிற வலை, கரையான் எடுக்கிற புற்று, தேனீ அமைக்கிற மெழுகு மாளிகை,

ஆகா! எல்லாவற்றையும் பார்க்கும்பொழுது பெருவியப்பு உண்டாகிறது! இந்த உலகத்தின் அமைப்பு, தோற்றம், அற்புதங்கள் எல்லாம் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றன.

அம்மம்மா! மேலேயிருக்கும் வானத்தைப் பார்க்கும்பொழுது அற்புதங்கள் இன்னும் அதிகரிக்கின்றன. நீலவானம், மேகங்கள் கூட்டம் கூட்டமாகச் செல்லுகின்றன! பகலில் சூரியன் கிழக்கில் உதயமாகி, மேலே நகர்ந்து, பின் மேற்கில் மறைந்துவிடுகிறது! இரவில் நட்சத்திரங்கள் ஏராளமாக மின்னுகின்றன! சந்திரன் உதயமாகிப், பிரகாசத்தைத் தருகிறது! ஆனல் சூரியனைப்போல் சந்திரன் ஒரே அளவாக இருப்பதில்லை, சிலநாள் வளர்ந்தும், சிலநாள் தேய்ந்தும், சில சமயங்களில் முழுமையாகவும், சில சமயங்களில் காணாமலும் போய் விடுகிறது! நாள்தோறும் சூரியன் உதயமாகி, மறைகிறது. மாதந்தோறும் சந்திரன் வளர்ந்து தேய்ந்து வருகிறது!

இந்த உலகத்தின் அற்புதங்கள் மட்டுமல்ல, மேலே தெரிகிற அதிசயங்கள் மட்டுமல்ல, இன்னும் நமது கண்ணுக்குத் தெரியாமல் மேகக்கூட்டங்களுக்குமேல் மேலுலகங்களும், அதேபோல் நமக்குக்கீழே கீழுலகங்களும் இருக்கின்றன என்று கேள்விப்படும்பொழுது ஆச்சரியம் அதிகரிக்கிறது. இந்த ஒரு உலகு மட்டுமல்ல, இதைப்போல பல உலகங்கள் இருக்கின்றன, இந்த உலகத்திலிருப்பதைவிட அதிகமான அற்புங்கள், அழகுகள், இன்பங்கள், வலிமைகள் அந்த உலகங்களில் இருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

ஒரு மாளிகையினுள்ளிருக்கும் ஒரு அறையைப் பார்த்துவிட்டு, அந்த அறையின் அமைப்பையும், வேலைப்பாடுகளையும் பெருமைப்படச் சொல்லும்பொழுது, அதைக் கேட்டுக்கொண்டிருப்பவன், "இந்த ஒரு அறைமட்டுமல்ல, இதைப்போல பல அறைகள் இந்த மாடியில் இருக்கின்றன, இந்த மாடியைப்போல பல அடுக்கு மாடிகள்—அற்புதங்களும், அதிசயங்களும் நிரம்பியவைகளாய்—இந்த மாளிகையில் இருக்கின்றன, காண்பாயாக" என்று கூறினல், எவ்வளவு ஆச்சரியமும், மற்ற மாடிகளைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவலும் உண்டாகும்! அதைப்போல, இந்த மண்ணுலகு மட்டுமல்ல, இதைப்போல பல உலகங்கள் அற்புதங்களிலும், அதிசயங்களிலும் மிகவாக இருக்கின்றன என்று கேள்விப்படும் பொழுது, அந்த வேறு உலகங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆவல் உண்டாவது இயல்பே.

ஒரு மாளிகையின் அமைப்பை, அதன் அருமை பெருமைகளைப் பற்றித் தெரிந்துகொள்ள, அந்த மாளிகையைக் கட்டிமுடித்த கட்டிட நிபுணரைக் கேட்டால் முழு விவரங்கள் கிடைக்கும். அதைப்போல இந்த உலகத்தைப் பற்றியும், மேலும் கீழும் இருக்கும் உலகங்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள இந்த உலகங்களையெல்லாம் உண்டாக்கியவரிடம் கேட்க வேண்டும்.

அண்ட சராசரங்கள்—அவற்றை உண்டாக்கியவர் பிரம்மா. அவருக்குத்தான் இந்த அண்டங்களின் அமைப்பும், அளவும் நன்ருகத் தெரியும்.

வேத புராணங்கள் உலக சிருஷ்டி, அண்டங்களின் அமைப்பு இவைகளைப்பற்றி விவரித்துக் கூறுகின்றன. வேத புராணங்கள் என்ருல் சாமான்யமானவையல்ல. வேதங்கள் பிரம்மாவால் உண்டாக்கப்பட்டவை, புராணங்கள் பிரம்மாவை உண்டாக்கிய சிவமூர்த்தியால் அருளப்பட்டவை. எனவே அண்டங்களின் அமைப்பைப்பற்றி வேத புராணங்களில் சொல்லப்பட்டிருப்பவை, அப்படியே அண்டங்களை உண்டாக்கிய கடவுள்களின் விளக்கங்களாகும்.

கட்டிடத்தின் அமைப்பைப் பார்க்க, அதைக் கட்டித்தந்த கட்டிட நிபுணர் எழுதிவைத்திருக்கும் திட்டப்படத்தை (Blue Print) பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். அதைப்போல அண்டங்களை, அகில உலகங்களின் அமைப்பைத் தெரிந்துகொள்ள, அவற்றை உண்டாக்கிய கடவுள் தந்திருக்கும் திட்டப்படத்தைப் (Blue Print) பார்த்தால் புரிந்துகொள்ளலாம். அந்தத் திட்டப்படங்களே வேத புராணங்களாகும். அவற்றைப் பார்த்தால், அண்ட சராசரங்கள் எப்படி உண்டாக்கப்பட்டன, எவ்வளவு அண்டங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன, அவற்றின் அளவு, உயரம், பெயர்கள் என்ன, இந்த அண்டங்களையெல்லாம் தாங்க எவ்வளவு பலமான அடிப்

படை போடப்பட்டிருக்கிறது என்பனவெல்லாம் தெரியவரும்.

உலக சிருஷ்டி

உலக சிருஷ்டியைப்பற்றி புராணங்களுக்குள் தகராறு இருக்கிறது. விஷ்ணு புராணங்களில் விஷ்ணு மூர்த்தி பிரமனைப்படைத்து உலகங்களை உண்டாக்கினார் என்று கூறப்படுகிறது. சிவ புராணங்களில் சிவனே சிருஷ்டிக்கு ஆரம்பமென்றும், சிவன் பிரம்மாவை உண்டாக்க, பிரம்மா உலகங்களை உண்டாக்கினார் என்றும் கூறப்படுகின்றன. என்ன ஆரம்பத்திலேயே தகராறு கிளம்புகிறதே யென்று பார்க்கிறீர்களா! போனால் போகிறது; எப்படியோ பிரம்மா இந்த உலகங்களைப் படைக்க கிளம்பினார்!

முதலில் இந்த உலகு தண்ணீர் மயமாக இருந்ததாம். அதில் சிருஷ்டிக்கர்த்தா காற்றாக அசைந்து, ஆடிக்கொண்டிருந்தாராம். பரிபூரணமாக இருந்த அவர் தியானத்தில் ஆழ்ந்து தேவர்களையும், உருத்திரர்களையும், சூரியர்களையும் உண்டாக்கினார். மேலும் தியானத்தில் இருந்து, தண்ணீரில் பொன் மயமான அண்டத்தை (கோளத்தை) சிருஷ்டித்தார். அந்த அண்டம் முட்டையைப் போலிருந்தது. அந்த பொன் அண்டத்துக்குள் பிரம்மா நுழைந்து, ஒருவருடகாலம் அந்த சிந்தனையாய் இருந்தார். பின் அந்த பொன் முட்டையை இரண்டு பங்காக்கி, ஒரு பங்கினால் சுவர்க்கத்தையும், மற்றொன்றால் பூமியையும் சிருஷ்டித்தார். பின் சராசரங்களையும், தத்துவங்களையும், யாகங்களையும் உண்டாக்கி, தன் முகத்திலிருந்து பிராமணர்களையும், தோளிலிருந்து க்ஷத்திரியர்களையும், தொடையிலிருந்து வைசியர்களையும், பாதத்திலிருந்து சூத்திரர்களையும் சிருஷ்டித்தார். இவ்வாறு அண்டசராசரங்கள் உண்டாக்கப்பட்டன. இது யஜுர் வேதத்தில் சொல்லப்பட்டிருப்பது; யஜுர் நான்கு வேதங்களில் ஒன்று. வேதங்கள் பிரம்மாவால் செய்யப்பட்டவை. எனவே சந்தேகங்கள் எதுவும் கூடாது, அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்!

பிரம்மா உண்டாக்கிய காரணத்தால், அதற்குப் பிரமாண்டம் என்று பெயர் உண்டாயிற்று. இனி இந்தப் பிரமாண்டம் எப்படியிருக்கிறது என்று பார்க்கலாம், வேதபுராணங்கள் படி. கூர்மம்! பிரமாண்டம் பலப்பல உலகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒன்றன்மேலொன்றாக அடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உலகங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு, அடிப்படை போலிருப்பது ஒரு ஆமையாகும். அந்த ஆமை தண்ணீர் வெளியில், ஆதார சத்தியின் மேலிருக்கிறதாம். ஆதார சத்தி என்றால் எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருக்கும் சத்தி என்று பொருள். எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டிருக்கிற கூர்மம், 10,000 00,00,000 மைல் (அதாவது பத்தாயிரம் கோடி மைல்) அகலமிருப்பதாகப் புராணங்கள் அளவிட்டுக் கூறுகின்றன. அந்தக் கூர்மம் பொன்மயமானது. அதன் முதுகில்தான் அண்ட சராசரங்கள் எல்லாம் நிற்கின்றன.

அட்டதிக்கு யானைகளும், ஆதிசேடனும்

கூர்மத்தின் முதுகில், எட்டு திக்குகளிலும் எட்டு யானைகள் இருக்கின்றனவாம். இந்த எட்டு யானைகளுமே புராண இதிகாசங்களில் அஷ்டதிக்கு கஜங்கள் என்று கூறப்படுகின்றன. இந்த எட்டு யானைகளுக்கு நடுவே, எட்டு திக்குகளிலும் எட்டு பாம்புகளிருக்கின்றன. ஒவ்வொரு பாம்பும் ஆயிரம் தலைகள் கொண்டது. படமெடுத்து அவைகள் எட்டு திக்குகளையும் தாங்கிக்கொண்டிருக்கின்றன. அந்தப் படத்தின் அகலம் 30 லட்சம் மைல் இருக்குமாம்.

இந்த எட்டு யானைகளும், எட்டு பாம்புகளும் சுற்றிலும் இருக்க, மத்தியில், கூர்மத்தில் நடுமுதுகில் மகாசேஷன் என்னும் ஆதிசேஷன் தனது ஆயிரம் படங்களையெல்லாம் விரித்துக்கொண்டிருக்கும். அதன் தலையில் 100 கோடி மைல் கனமுள்ள பொன் மயமான பூமி இருக்கிறது.

ஆதிசேஷனுக்கு ஆயிரம் தலைகள் வந்ததற்கும் புராணத்தில் ஒரு கதை யிருக்கிறது. ஆதிசேஷன் முதலில் சிவபெருமான் முடியில் இருந்ததாம். சிவபெருமானை வணங்குகிறவர்கள் ஆதிசேஷனையும் சேர்த்து வணங்கவேண்டியிருப்பதால், அதுகண்டு ஆதிசேஷன் வீண் பெருமையடைந்ததாம். இதையறிந்த கைலையீசனார், உன் தலை ஆயிரம் பாகங்களாக வெடிக்கக்கடவது எனச் சாபமிட்டாராம்.

இந்தச் சாபத்தால், ஆதிசேஷனுக்கு ஆயிரந்தலை வந்ததாம். அண்டசராசரங்களை உண்டாக்கிய பிரமதேவர், கூர்மத்தை வைத்து, அதன் முதுகின்மேல் ஆயிரந்தலை ஆதிசேஷனை வைத்து, அதற்குமேல் மற்ற உலகங்களை வைத்தார். இனி ஆதிசேடனுக்கு மேலிருக்கும் உலகத்தைக் கவனிக்கலாம்.

ருத்ரபுவனம்

ஆதிசேஷன் தலைமீதில் நூறுகோடி மைல் கனமுள்ள பொன்மயமான பூமி இருக்கிறது. இதன் மேலிருப்பது ருத்ர புவனமாம். இங்கு இருப்பவர்கள் ருத்ரர்கள் எனப்படுவர்.

உலகங்களை சிருஷ்டிக்கத் தொடங்கிய பிரமனுக்குத், தனக்குள்ள பெரிய வேலையைக்கண்டு, எப்படி முடியுமெனக் கவலைதோன்றியதாம். உடனே பிரமதேவன் சிவனை நோக்கித் தவமியற்றினர். உடனே சிவபிரான் தோன்றி, பிரமனுக்கு உதவியாகப் பதினொரு உருத்திரர்களை உண்டாக்கித் தந்தார். அந்த உருத்திரர்கள் பிறந்த கதை வேடிக்கையானது. பதினொரு உருத்திரர்கள் வருவார்களென சிவபிரான் வரந் தந்ததும், பிரமதேவனுடைய நெற்றியிலிருந்து ஒவ்வொருவராகப் பிறந்தார்களாம்!

பிரமனுக்கு உதவியாகப் பதினொரு உருத்திரர்கள் வந்தார்கள். அவர்களாலும் உலக சிருஷ்டி முடியாதுபோலிருந்தது. எனவே அவர்கள் தங்களுக்கு உதவியாக ஒவ்வொருவரும் ஒரு கோடி உருத்திரர்களை உண்டாக்கிக் கொண்டார்களாம். அவர்கள் எப்படிப் பிறந்தார்கள் நெற்றியிலிருந்தா? புருவத்திலிருந்தா? என்று புராணமெதுவும் சொல்லவில்லை. எப்படியோ பிரமனுக்கு உதவியாகப் பதினொரு உருத்திரர்களும், அந்தப் பதினொரு உருத்திரர்களுக்கு உதவியாகப் பதினொருகோடி உருத்திரர்களும் உண்டானர்கள் இந்த உருத்திரர்களெல்லாம் தங்கியிருக்கிற இடம்தான் ருத்ரபுவனம் என்பதாகும்.

இந்த ருத்ரர்களுக்கெல்லாம் தலைவராக இருப்பவர் காலாக்னி ருத்ரர் என்பவர். ருத்ர புவனம் 500 கோடி மைல் நீளமும், 100 கோடிமைல் உயரமும் இருப்பதாகப் புராணம் கூறுகிறது.

மேற்சொன்ன ருத்ரபுவனத்துக்கு மேல் ஒரே புகைமயமாக இருக்கிறது. அந்தப் புகை மண்டலம் 500 கோடி மைல்கள் உயரத்துக்குப் பரவியிருக்கிறது. (உலகங்களின் உயர அகலங்களைப் பற்றிச் சொல்லும்பொழுது 500 கோடி 1000 கோடி என்று அள்ளி வீசப்படுகிறதே என்று நினைக்காதீர்கள், இவைகளெல்லாம் வேத, புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. வேத, புராணங்கள் தெய்வத்தால் உண்டாக்கப்பட்டதாம். எனவே சொல்வதில் அதிகம் சந்தேகங்களைக் கிளப்பிக்கொள்ளாதீர்கள்!)

வேத புராணங்களை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், அவற்றில் சந்தேகங்கள் கொண்டு வேத நிந்தனையுடன், தானுதி காரியங்களைச் செய்யாமலிருக்கும் பாபாத்மாக்களுக்குத் தரப்படும் நரகங்களும், அந்த நரகங்களின் தலைவனை யமனின் பட்டணங்களும் இந்த புகை மண்டலத்துக்கு மேல் இருக்கின்றன.

நரகலோகம்

சொர்க்கத்தைக் காட்டி மக்களை மயக்கியது போல, நரகத்தைக்காட்டி மக்களைப்பயமுறுத்தி வந்தார்கள். புண்ணியஞ்செய்தால் சொர்க்கமென்றும் பாபஞ் செய்தால் நரகமென்றும் வேதங்களும், புராணங்களும் சதா சொல்லியபடி இருக்கின்றன. பிரமதேவனின் பிரபஞ்ச அமைப்பில் நரகங்களுக்கு முக்கியமான இடம் தரப்பட்டிருக்கிறது, அந்த நரகங்களைப்பற்றிய விளக்கங்களும், வர்ணனைகளும் புராணங்களில் அதிகப் பக்கங்களை நிரப்புகின்றன.

பூலோகத்திலுள்ளவர்கள் செய்கிற பாப புண்ணியங்களைக் கவனித்து, அதற்குத்தக்கபடி சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் அனுப்பும் பெரும்பொறுப்பைச் செய்ய யமன் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உதவியாக சித்ரகுப்தன் தரப்பட்டுள்ளான். ஜீவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியங்களும்—தும்மினாலும் தூங்கினாலும், நடந்தாலும் நின்றாலும், நினைத்தாலும், பேசினாலும் எந்தச் சிறு காரியமாயிருந்தாலும் சரி, அது சித்ரகுப்தனால் எழுதப்பட்டுவிடும். இந்தக் கட்டுரை எழுதப்படுகிறதா, உடனே ஒரு எழுத்துவிடாமல், எழுதுகிற செயலுடைய ஏட்டில் சித்ரகுப்தன் உடனே எழுதி விடுவான். இந்தக் கட்டுரையை யாரார் படிக்கிறார்களோ அவர்களுடைய ஏடுகளிலெல்லாம் அந்தப் பாவகாரியங்கள் எழுதப்பட்டுவிடும். கோடிக்கணக்கான உயிர்கள்; அவர்களுடைய கணக்குகளை யெல்லாம் சித்ரகுப்தன் ஒருவனே

எழுதிவிடுகிறான்! கடைசியில் உயிர் இறந்ததும், யமபடர்களால் இழுத்துக்கொண்டுபோய் யமன் முன்விடப்பட, சித்ரகுப்தன் ஏட்டைப் புரட்டிப், பாவபுண்ணியக் கணக்குகளைப் புரட்டிப்பார்ப்பான். பின் பாவங்கள் அதிகமிருந்தால் நரகலோகத்துக்கும், புண்ணியங்களிருந்தால் சொர்க்கத்துக்கும் அனுப்பப்படும்.

பாவ, புண்ணியங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, தீர்ப்புத்தரவேண்டியவர் யமன். அவர் எப்படிப் பட்டவர் என்பதைப் பார்க்கலாம். சூரியனுக்கு பல மனைவிகள் உண்டு. அவர்களில் சாயாதேவி என்பவளிடம் யமன் பிறந்தான். சூரியனுடைய மற்றொரு மனைவியான சுவாகாதேவியிடம் யமுனை பிறந்தாள். யமனும், யமுனையும் அண்ணன் தங்கையாவார்கள். இருவரும் ஒன்றாக வளர்ந்துவருகையில், யமன் வாலிபப் பருவமடைந்தான், தேவர்களால் போற்றும் வலிவுடையவனானான். யமுனை இளமையும், எழிலும் கூடிய அழகு நங்கையானாள்.

யமுனையைப் பார்க்கும்பொழுது யமனின் மனதில் அலை மோதத்தொடங்கியது! வரவர அந்த விபரீத எண்ணம் வளர்ந்து, யமுனையின் மீது யமனுக்கு அடக்கமுடியாத ஆசை உண்டாகிவிட்டது! என்ன விபரீதம் என்பீர்கள்! அண்ணன், தங்கை! தங்கைமீதா அண்ணனுக்கு...சே! சே! குடித்துவிட்டு நிலை தவறிய கசடனுக்குக்கூட அத்தகைய எண்ணம் கனவில்கூட வராதே என்பீர்கள். கடைந்தெடுத்த காமுகனுக்கும் வராத எண்ணம், வரக்கூடாத எண்ணம், ஆனால் கடவுள் புத்திரரான எமனுக்கு தனது உடன்பிறந்தாள் யமுனையிடம் காம எண்ணம் தோன்றிவிட்டது.

ஆனால் பாவம்! தங்கை யமுனாவுக்கு அண்ணனுடைய தவறான எண்ணம் தெரியாது. எப்பொழுதும்போலவே இருந்தாள். அண்ணன் தன்னை உற்றுப் பார்ப்பது, பின் பெருமூச்சுவிடுவது, கூப்பிடும்பொழுது ஏற்படுகிற தடுமாற்றம் இவைகளெல்லாம் தங்கைக்குச் சிறிதும் தெரியவில்லை. உற்றுப்பார்த்தால் "ஏன், தலைக்கணி சரியில்லையா, அண்ணன்!" என்றுதான் கேட்பாள். யமனின் முகம் கறுத்து, நெற்றியில் வியர்வை வடிந்தால் "என்னண்ணா! தலைவலியா?" என்று நெற்றியைத் தடவிக்கொடுப்பாள். தங்கையின் தளிர்க் கரம் அவனுடைய தாபத்தைத்தான் அதிகரித்தது. தங்கை, அண்ணன், ஒரு தந்தையின் மக்கள், இந்த உறவுமுறைகளைப் பற்றியெல்லாம் யமன் நினைக்கவில்லை. அவன் நினைவெல்லாம், யமுனையிடம் எப்படித் தன் எண்ணத்தை வெளியிடுவது, எப்படி அவளை இணங்கச்செய்வது என்பதுதான்.

மாலை நேரம். தோட்டத்தில் யமுனை மலர்களைத் தொடுத்துக்கொண்டிருந்தாள். கூந்தல் அவிழ்ந்து காற்றில் புரண்டுகொண்டிருந்தது, அவளுடைய உதடுகள் இனிய கானத்தை இசைத்துக்கொண்டிருந்தன. அப்பொழுது யமன் அங்கு வந்தான். மிகப் புகழ்பெற்ற தெய்வ ஓவியனால்கூட சித்தரித்துக்காட்ட முடியாத அழகுச் சித்திரமாக யமுனை அமர்ந்திருப்பதைப் பார்த்தான். அவன் உள்ளம் வெறிகொண்டதாயிற்று, நிற்கக்கூட முடியாமல் அவளை நோக்கி ஓடிவந்தான். காலடிச் சத்தம் கேட்டதும், யமுனை பார்த்தாள், தன் அண்ணன் ஓடிவருவதை. எழுந்து நின்று "எங்கே, என்னைப் பிடியுங்கள்!" என்று ஓடினாள். அந்தத் தோட்டத்தில்தானே அவர்கள் அண்ணன் தங்கையாக ஓடிவிளையாடியிருக்கிறார்கள். ஓடிப் பிடித்து விளையாடுவதாகவே அவள் நினைத்து ஓடினாள். பின்னால் யமன் அவளைப் பிடிக்க ஓடினான்.

தன் பின்னால் தன் அண்ணன் ஓடிவருகிறான் என்று யமுனை நினைத்தாள். ஆனால் தன் பின்னால் ஓடிவருவது ஒரு காமுகன் என்பது அவளுக்குத் தெரியாது.

கடைசியாக ஒரு புதருக்கருகில் யமன் யமுனையின் கையைப் பிடித்து நிறுத்திவிட்டான். மூச்சுத்திணறியவண்ணம், "போதும், நீ ஜெயித்துவிட்டாய்!" என்று யமுனை சிரித்துக்கொண்டு நின்றாள். விளையாட்டில் வென்றுவிட்டதாக அவள் சொன்னாள். காமவிளையாட்டில் வெற்றிகாணவல்லவா அவன் வந்திருக்கிறான்! அவள் இருகரங்களையும் சேர்த்து இழுத்தான்.

"போதும், விடு! நான்தான் தோற்றுவிட்டேனே! அதோ! இருட்டுகிற நேரம்! அப்பா தேரில் வந்துவிடுவார்!" என்று யமுனை போக முயன்றாள். ஆனால் யமன் அவளைப் போகவிடாமல் அவள் கழுத்தை வளைத்து, முத்தமிட நெருங்கினான். யமுனையும் தன் நெற்றியைக் காண்பித்தாள். அண்ணன் தங்கையின் நெற்றியில் முத்தமிடக்கூடாதா? அதிலும் தங்கை

தோற்றிருக்கிறாள். உண்மையில் தோற்றதும் தலையில் ஒரு குட்டு கிடைக்குமென்றுதான் யமுனை எதிர்பார்த்தாள். பிறைச்சந்திரன் போன்று, களங்கமற்று விளங்கும் நெற்றியை யமன் கவனித்ததாகத் தெரியவில்லை. சிவந்து விளங்கிடும் அவள் இதழ்களை நெருங்கினான். அண்ணன் போக்கு யமுனைக்குப் புரியவில்லை. அண்ணனின் கைப்பிடி இறுகுகிறது, உதட்டருகே பெருமூச்சு வீசுகிறது! ஒரு கணம் திகைத்தாள், விபரீதம் புரிந்தது. "ஐயோ." என்று உதறித்தள்ளித் தூர விழுந்தாள். அவளால் நினைக்கக்கூட முடியவில்லை! கண்களைப் பொத்திக்கொண்டாள்! தன் அண்ணன்— அந்தக் காமுகனைக் காணவும் அவள் கண்கள் கூசின! காமவெறியேறிய யமனோ தன் தங்கையை மீண்டும் நெருங்கினான்!

இனியும் பேசாமலிருந்தால், நிலைமையைச் சமாளிக்க முடியாது என்று யமுனைக்குத் தோன்றியது. அவன் சூரியனின் மகன் என்றால், தானும் சூரியனின் மகள், அவனைப்போல தனக்கும் வலிவுண்டு என்ற துணிவு பிறந்தது. தனது தெய்வசக்தியை முன்வைத்து, "என்னை நீ தொடாதிருக்க!" என்று யமுனை சாபமிட்டாள். அதனால் யமனால் யமுனையை நெருங்க முடியவில்லை. இவ்வாறு தன் தங்கையின்மேல் காமவெறிகொண்டு யமன் அலைந்ததை, வேதங்களிலெல்லாம் முதலாவதாகக் கூறப்படும் ரிக் வேதம் கூறுகிறது.

தன் தங்கையையே காமவெறிக்குப் பலியாக்க யமன் துணிந்தான்! அண்டசராசரங்களைப் படைத்த பிரமதேவன், அப்பேற்பட்ட யமனைப் பொறுக்கியெடுத்துதான், ஜீவர்கள் செய்யும் பாவபுண்ணியங்களைக் கண்டறிந்து நரகத்திற்கும் சொர்க்கத்திற்கும் பிரித்தனுப்பும் வேலையைத் தந்தார்! கன்னக்கோலுடன் திரிபவனை நீதிபதியாக நியமிப்பதுபோல, காமவெறிகொண்டலைபவனைக் கன்னியர் மாடத்துக்குப் பாதுகாப்பாளனாக்குவதுபோல, யமனுக்கு அந்த வேலை தரப்பட்டிருக்கிறது. வேலையோ பாவபுண்ணியங்களைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய வேலை! இவனோ தங்கையைத் தாரமாக்க நினைத்த மாபாதகன்! கீழ்த்தரமான மனிதன் கூட நினைக்கக் கூசும் கீழ்த்தரமான செயல், அதைச் செய்தவனுக்கு மிக உயர்ந்த, ஒழுக்கத்தைக் கணக்கிடுகிற வேலை, நான்முகன் படைப்பில்!

ருத்ர புவனத்துக்குமேல் 500 கோடிமைல் புகைமண்டலம் இருக்கிறது என்று முன்பு கூறப்பட்டது. அதற்குமேல் 9 கோடி மைல்கள் வெறும்வெளியாகவிருக்கின்றன, அதாவது வெறும் காலியிடமாக இருக்கின்றன. அண்டங்களைப் படைத்த பிரமதேவன் அந்த இடத்தை ஒன்றும் செய்யாமல் விட்டுவைத்திருக்கிறார். அந்த அகண்ட வெளிக்குமேல் யமனுடைய 33 பட்டணங்கள் இருக்கின்றன. இந்தப் பட்டணங்கள்மேல் நரகங்கள் இருக்கின்றன.

இதுவரைக் கூறப்பட்டதில், அடியில் கூர்மம், அதற்குமேல் அஷ்டதிக்கு யானைகள், ஆயிரந் தலையுடைய ஆதிசேடன், அவற்றுக்குமேல் ருத்ரர்கள் இருக்கும் ருத்ரபுவனம், ருத்ரபுவனத்துக்குமேல் புகைமண்டலம், அதற்குமேல் வெட்டவெளி, வெட்ட வெளிக்குமேல் யமனுடைய பட்டணங்கள், அவனுடைய ஆளுகைக்கு உட்பட்ட நரகங்கள்!

இனி நரகங்களின் வகையையும், அவற்றின் மேலுள்ள உலகங்களைப்பற்றியும் கவனிக்கலாம்.

(தொடரும்)

வினாவும் விளக்கமும்

'தமிழ்நாடு தமிழர்க்கே' என்று ஒலிமுழக்கமிடாமல், 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்று ஒலி முழக்கம் இடுவானேன்?

1937—38-ம் ஆண்டுகளில், ஆச்சாரியாரால் புகுத்தப்பட்ட கட்டாய இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, வடநாட்டு ஆதிக்கப் பிடியிலிருந்து தமிழகத்தைத் தனியே பிரித்துவிட்டால் என்ன என்ற உரிமை வேட்கை, கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த தலைவர்களிடத்தே அரும்பிற்று. தமிழகத்தைத் தனியே பிரித்துத் தமிழர்க்கான தனி ஆட்சியை நிறுவினால்தான், தமிழர்களின் வாழ்வு, வளம், உரிமை, உயர்வு, கலை, நாகரிகம், பண்பு, பழக்கவழக்கம், மொழி, முதன்மை எல்லாம் காப்பாற்றப்படும் என்ற உறுதியான முடிவைத் தலைவர்கள் எடுத்தார்கள். சென்னை கடற்கரையில், 1938-ம் ஆண்டில், பேராசிரியர் மறைமலையடிகளார் தலைமையில் நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டத்தில்தான், தலைவர் அவர்கள் முன்மொழிய, பெரியார் இராமசாமி, நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோர் ஆதரிக்கத் 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற முடிவு முழுமனதோடு கூடியிருந்த மக்களால் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற அந்த உரிமைக்குரல் தமிழகத்தின் பல பகுதிகளிலும் எழுப்பப்பட்டது. தமிழ்நாட்டுப் பிரிவினை முழக்கம் தமிழகத்தில் வாழ்ந்துவந்த நீதிக்கட்சியினராலும், பகுத்தறிவு இயக்கத்தினராலும், தமிழ்மொழி ஆர்வமுடையோராலும், ஓயாமல் எழுப்பப்பட்டுவந்தது. மாற்றுக்கட்சியினர் அப்பொழுதெல்லாம் 'எலிவளைகள் எலிகளுக்கே' என்று கேலிமொழி பேசி எதிர்ப்புக்காட்டினர். பிரிவினை ஆதரிப்பாளர்கள் 'எலிவளைகள் எலிகளுக்கில்லாமல், அவை எப்படிப் பூனைகளுக்காகும்?' என்றும், 'எலிவளைகள் எலிகளுக்குத்தான்; தமிழ்நாடு தமிழர்க்குத்தான்' என்றும் வீரமுழக்கமிட்டுவந்தனர். 1938-39-40-ம் ஆண்டுகளில், பெரியார் இராமசாமி அவர்கள் நீதிக்கட்சியின் தலைவராகப் பணியாற்றி வந்த நிலையிலும், 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற ஒலிமுழக்கந்தான் பெருமுழக்கமாக இடப்பட்டுவந்தது.

1940-ம் ஆண்டில், திருவாரூரில், பெரியார் இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற நீதிக்கட்சியின் மாநில மாநாட்டில், 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற கொள்கை பெரியாரால் வலியுறுத்திப் பேசப்பட்டது. தமிழ்நாடு தமிழர்க்கு ஆவதற்காகச் சொல்லப்பட்ட காரணங்களை நன்கு கேட்டுக்கொண்டிருந்த ஆந்திர, கன்னட, மலையாளப் பகுதிகளின் பிரதிநிதிகள், எந்த எந்த காரணங்களுக்காகத் தமிழ்நாடு வடநாட்டினின்றும் பிரியவேண்டும் என்று தமிழர்கள் கோருகிறார்களோ, அந்தக் காரணங்கள் ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய நாடுகளுக்கும் பொருந்துவனவாகும் என்று முறையே தனித்தனியாக வாதிட்டு நின்றார்கள். தமிழ்நாடு வடநாட்டு ஆதிக்கத்தினின்றும், வெள்ளையன்—வடநாட்டுக் கொள்ளையன் சுரண்டலினின்றும் பிரிவது எவ்வளவு இன்றியமையாததோ, அதே அளவு இன்றியமையாமை யுடையவைதாம் ஆந்திரம்— கருநாடகம் — கேரளம் ஆகிய பகுதிகள் பிரிவதும் என்ற கருத்து வற்புறுத்தப்பட்டதோடு, பிரியும் திராவிடப் பகுதிகள் நான்கும் ஒரு கூட்டாட்சியில் அமையலாம்—அமைந்தால் ஏற்றதும் நல்லதும் ஆகும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது, அந்த மாநாட்டில். அதன் விளைவாகத்தான் 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற ஒலிமுழக்கம் 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்ற ஒலிமுழக்கமாக மாறவேண்டி ஏற்பட்டது. 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்பது இன்றியமையாமை காரணமாக வளர்ந்த கொள்கை வளர்ச்சியாகும். தமிழகம்— ஆந்திரம் — கருநாடகம் — கேரளம் ஆகிய நான்கும் தனித்தனியாக மொழிவழிப் பிரியும் உணர்ச்சியும், மொழிவழியாகப் பிரிந்தவுடன் வடநாட்டு ஆதிக்கத்தினின்றும் துண்டித்துக்கொள்ளும் உணர்ச்சியும், துண்டித்துக்

கொண்ட நான்கும் குறைந்த அளவு திட்ட அடிப்படையில் ஒன்றாக இணைந்து கூட்டாட்சியாக மலர்வதற்கான உணர்ச்சியும் ஏற்படுவதற்கான சூழ்நிலை, [illegible]வாவும், திட்டமாகவும் இருப்பதால், நாம் 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்ற உரிமை முழக்கத்தை உறுதியுடன் எழுப்பிக்கொண்டிருக்கிறோம். ஒரு அணுவுக்குள் காலணு எப்படித் திண்ணமாக இருக்கிறதோ, அப்படியே திராவிடநாட்டிற்குள் தமிழகம் உறுதியாக இருக்கவே இருக்கிறது. ஒரு அணுவைத் தேவையானால் மாற்றி, அதிலிருந்து காலணுவைப் பெற்றுக்கொள்ள முடியும்; அதுபோலவே திராவிட நாட்டிலிருந்து தமிழகத்தைக் தனியே பிரித்துக் கொள்ளலாம்; ஆனால் அதற்கான அவசியமும் சூழ்நிலையும் நெருக்கடியும் இப்பொழுது ஏற்பட்டுவிட்டதாக நாம் எண்ணவில்லை. எனவே தான் 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்ற கொள்கையில் முழு நம்பிக்கையும், உறுதியும் கொண்டு அதனை உரிமை முழக்கமாக முழங்கி வருகிறோம்.

ஃ ஃ ஃ

திராவிட நாட்டுப் பிரிவினையை ஆந்திரத்தான் ஆதரித்தானா? மலையாளத்தான் மதித்தானா? கன்னடத்தான் காதுகொடுத்துக் கேட்டானா? அப்படியில்லாதபோது திராவிடநாடு எப்படிக் கிட்டும்?

இப்படிக் கேட்பதிலே மாற்றுக்கட்சி தோழர்கள் சிலர் மனமகிழ்ச்சியும், மன அமைதியும் பெறுகின்றனர். திராவிட நாட்டுப் பிரிவினை முழக்கத்தின் வலிவையும், வளர்ச்சியையும் கண்டு பொறாமைப்பட்ட மாற்றுக்கட்சித் தோழர்கள், தங்கள் மன எரிச்சலைத் தாங்களே அமைதிப்படுத்திக்கொள்ள, இப்படிப்பட்ட கேள்விகளை அடிக்கடி கேட்டு மனமகிழ்ச்சிப் பெற்றுக்கொள்கிறார்கள். இவைகளுக்கு ஏடுகளிலும், மேடைகளிலும் பலமுறை விளக்கந் தரப்பட்டுள்ளது. எனினும் அவர்கள் கேட்கிறார்கள் என்றால், அவர்கள் கேட்பது விளக்கம் பெற அல்ல; தம்மைத்தாமே அமைதிப்படுத்திக் கொள்ளவாகும். என்றாலும் பொதுமக்கள் மன்றத்தில் கிளப்பிவிடப்பட்ட ஐயப்பாடுகளுக்கு விளக்கங் கூறவேண்டியது இன்றியமையாததாகிறது.

(திராவிடநாட்டுப் பிரிவினைக் கொள்கை, ஆந்திர—கருநாடக—கேரளப் பிரதிநிதிகளின் ஆதரவின்பேரில்தான், நீதிக்கட்சியின் மாநில மாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது என்பது, முன்பே விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.)

திராவிடநாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சிக்குத் தமிழகத்தில் மலர்ந்திருக்கும் அளவு மக்கட் சக்தியின் ஆதரவு, மற்றப் பகுதிகளில் மலரவில்லை என்பது உண்மைதான். (அங்கெல்லாம் மலராததற்குக் காரணம், அப்பகுதி மக்கள் பிரிவினைக்கொள்கையை வெறுத்தொதுக்கிவிட்டார்கள் என்பதல்ல, பிரிவினைக் கொள்கை இன்னமும் சரியானபடி அவர்கள் முன் எடுத்துவைக்கப்படவில்லை என்பதேயாகும். பிரிவினை முழக்கம் திராவிடமெங்கும் சரியானபடி பரவாததற்குக் காரணம் பிரிவினைக் கொள்கையிடத்து ஏற்பட்டுள்ள குறைபாடு அல்ல, கழகத்திடத்து ஏற்பட்டுள்ள வசதிக் குறைவுதான். பிரிவினை முழக்கத்தைத் தமிழகத்தில் எழுப்பிவரும் திராவிட முன்னேற்றக் கழகம், போதுமான வசதியையும், வாய்ப்பையும் தேடிக்கொண்டான பிறகு, பிற பகுதிகளிலும் உறுதியாக அந்த முழக்கத்தை எழுப்பியே தீரும்.)

திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை முதலில் ஏற்றுக்கொள்ள மறுத்த தமிழகத்தின் பல பகுதிகள், எப்படிச் சிறுகச்சிறுக நாளடைவில் ஏற்றுக்கொள்ளுகிற தன்மையைப் பெற்றுவருகின்றனவோ, அதுபோலவே ஆந்திரமும், கருநாடகமும், கேரளமும் பிரிவினைக் கோரிக்கைக்கு நாளடைவில் ஆதரவு காட்டும் என்ற உறுதிப்பாடு நமக்கு உண்டு. (வடநாட்டுத் தொடர்பினின்றும் தன்னை அறுத்துக் கொள்ளவேண்டும் என்ற உணர்வு திராவிட இயக்கத்தின் முயற்சியில்லாமலேயேகூட, பிற பகுதிகளில் சிறுகச் சிறுக அரும்பத் தொடங்கியுள்ளது. வடநாட்டு ஆதிக்கத் தொடர்பினின்றும் கேரளத்தைத் தனியே பிரிக்கவேண்டும் என்ற முழக்கத்தைக் கேரளப் பகுதிகளில், கேரள சோஷியலிஸ்ட் கட்சி மிகத் தீவிரமாகச் செய்துவருகிறது.) வடநாட்டினின்றும் தென்னாடு ஏன் பிரியவேண்டும் என்பதற்கான காரணங்களைத், திராவிட முன்னேற்றக் கழகம் போய்க் கேரளத்தின் பட்டி தொட்டிகளில் வைக்கவேண்டிய இன்றியமையாமைக்குக் கழ

கத்தை உள்ளாக்காமல், அந்தப் பணியைக் கேரள சோஷியலிஸ்ட் கட்சியே திறம்பட செய்துவருகிறது. சென்ற பொதுத்தேர்தலின்போது, கேரளப் பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்ய பண்டித நேரு வந்தகாலை, அங்குள்ள நகரங்களின் சில சுவர்களில், "மார்வாடியே வெளியேறு" என்பதுபோன்ற முழக்கங்கள் எழுதப்பட்டிருந்ததையும், அதனை நேரு பார்த்துவிட்டு, அதுபற்றிக் கண்டித்துப் பொதுக்கூட்டங்களில் பேசியதையும் நினைவு கூர்ந்து பார்த்தால், வடநாட்டுச் சுரண்டலுக்கு எதிர்ப்பு கேரளத்தில் உருவாகிவருவது விளங்கும். சேலத்தில் நடைபெற்ற திராவிடக் கழக மாநில மாநாட்டில் பேசிய மலையாளத்தைச் சேர்ந்த தலைவர்கள் வடநாட்டுத் தொடர்பினின்றும் தென்னாடு பிரிந்துபோகவேண்டியதன் இன்றியமையாமையை மிகவும் வற்புறுத்திக் கூறியுள்ளார்கள்.

சென்ற ஓராண்டு காலத்திற்குமுன்பு மைசூர் மாநில முதலமைச்சர் தோழர் ஹனுமந்தையா, மத்திய சர்க்கார் எப்படி வடநாட்டுக்காரர்களால் ஆட்டிப்படைக்கப்படுகிறது என்பது பற்றியும், தென்னாட்டு அரசுகள் அதற்கு எப்படி எடுபிடியாக நடக்கவேண்டிய நிலைமையிலிருக்கிறது என்பது பற்றியும், தென்னாட்டின் மீது இந்திமொழியைத் திணிக்கும் ஆதிக்கத்தைப்பற்றியும் குறிப்பிட்டதிலிருந்தே வடநாட்டின்மேல் மைசூருக்கு ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பு நன்கு தெளிவாகும். கன்னட மக்களுக்குத் தாய்மொழிப் பற்றும், தாய்மொழிப் பற்றின் வழிக்கு கருநாடக நாட்டுப்பற்றும், மேற்கூறிய மனக்கசப்பும் தொடர்ந்து வளருமேயானால், வடநாட்டினின்றும் அறுத்துக்கொண்டு போக வேண்டும் என்ற உணர்வு அவர்களிடம் உறுதியாகக் கொழுந்துவிட்டு எரியவே செய்யும். மேலும் கன்னடியர்கள் தங்கள் பகுதியின் வளத்தையும், வடநாட்டோடு மைசூர் தொடர்பு பூண்டிருப்பதால் இலாபமா அல்லது நஷ்டமா என்பதையும் கணக்குப் போட்டுப் பார்க்கும்போது, வடநாட்டின் தொடர்பை நீக்கிக்கொண்டு, பிற தென்னாட்டுப் பகுதிகளோடு குறைந்த அளவு திட்ட அடிப்படையில் உறவு கொண்டு வாழ்வது, மைசூருக்கு ஏற்றத்தையும் எழிலையும் தருவதாகும் என்பதை உணர்ந்தே தீருவார்கள்.

திராவிடநாட்டுப் பிரிவினையைப்பற்றி ஆந்திரத் தோழர்களுடன் தனிப்பட்ட முறையில் விளக்கங்கொடுத்து அலசிக்காட்டிப் பேசும்போது, அவர்கள் ஏற்றுக்கொள்ளவே செய்கின்றனர். ஆனால் ஆந்திராவிலுள்ள பெரும்பாலோரின் எண்ணம், ஆந்திர மாநிலத்தை நிலையுள்ளதாக்க முனைவதிலும், விசால ஆந்திரத்தைக் காண முற்படுவதிலும் இப்பொழுது ஈடுபட்டுள்ளதால், திராவிடநாட்டுப் பிரிவினை முழக்கத்தைச் செவிமடுக்கவோ, அதுபற்றிச் சிந்தித்துப் பார்க்கவோ முனைப்பிருக்காது. ஆனால் இன்னும் சிறிது காலத்திற்குள் ஆந்திரம் ஒரு பலம்பொருந்திய ஆதிக்க மத்திய ஆட்சியின்கீழ்த் தான் அடங்கிக்கிடப்பது, தனக்குப் பயன்தருமா அல்லது தனியே தன்னைத் துண்டித்துக்கொண்டு, பிறகு தன்னோடு நெருங்கிய தொடர்புடைய கருநாடகம், தமிழகம் ஆகியவற்றோடு தேவையான அளவுக்கு உறவுவைத்துக்கொண்டு வாழ்வது பயன்தருமா என்று எண்ணிப்பார்க்கும் நிலை, அதற்கு ஏற்பட்டே தீரும். அப்பொழுது அது பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்தத்தான் செய்யும்.

இப்படியாகத் தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய நான்கு பகுதிகளிலும் உருவாகிவரும் சூழ்நிலைகள் திராவிடநாட்டுப் பிரிவினைக் கோரிக்கைக்குத் துணையாக நிற்பவையேயொழிய மாறுகொளக் கிடப்பவையல்ல.

மத்திய அரசாங்கத்திடம் போய்க் குவிந்து கிடக்கும் அதிகாரங்களில் பலவும், வரியினங்களில் பலவும் மாநில அரசுகளுக்கு உரிமையாக்கப்படவேண்டும் என்ற கருத்தைத் தென்னாட்டு மாநில அரசுகளின் முதலமைச்சர்கள் அவ்வப்போது வெளியிடுவது பிரிவினைக்கிளர்ச்சிக்கு உறுதுணைசெய்வதேயாகும். அன்பர் ஆச்சாரியார் சென்னை முதலமைச்சராக இருந்தபோது இந்தக் கருத்தைச் சிற்சிலபொழுது வெளியிட்டிருக்கிறார்.

இந்திய விடுதலைப்போராட்டத்தோடு சேர்ந்துவளர்ந்த தலைவரும், பெருவாரியான மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்று வாழும் நிலையிலுள்ளவருமான பண்டித ஜவஹர்லால் நேரு, இந்தியப் பிரதமராக இருந்துவருவதால், தென்னாட்டு அரசுகள் இந்தியப் பேரரசோடு கொண்டிருக்கும் பிடிப்பை அவ்வளவு எளிதாகக் குறைத்துக்கொள்ளவோ, தளர்த்திக் கொள்ளவோ, வெட்டிக்கொள்ளவோ இயலாத நிலையிலிருக்கின்றன. இந்தியாவை ஒன்றுபடுத்தும் ஒரு பெரும் ஆற்றலின் சின்னங்களாக

விளங்கிய காந்தியாரும், பட்டேலும் மறைந்து விட்டார்கள். அவர்களது பெயர்களைக் காங்கிரஸ்காரர்களே நினைவுபடுத்திக் கொள்வது என்பது அருமையாகிவிட்டது. இப்பொழுது இந்தியாவை ஒன்றுபடுத்தும் ஒரு பெரும் ஆற்றலின் சின்னமாக, விட்ட குறை தொட்ட குறையாக விளங்கும் ஒரே தலைவர் பண்டித நேருதான் அவர் நீடூழி காலம் வாழட்டும்! ஆனால் அவர் காலத்திற்குப் பிறகு எந்த வடநாட்டு லால்பகதூர் சாஸ்திரிக்கும், தாண்டனுக்கும், பந்துக்கும், கித்வாய்க்கும் தென்னாட்டு மக்கள் வழிபட்டு நடப்பார்கள் என்று எதிர்பார்க்கமுடியும்? பண்டித நேருவின் சுட்டுவிரல் காட்டியவழி இன்று இந்தியா இயங்குகிறது; நேருவின் சுட்டுவிரல் அவ்வளவு வலிவு படைத்தது! ஆனால் நேருவிற்குப் பிறகு வரும் எந்தத் தலைவரின் சுட்டுவிரலும், தென்னாட்டைப் பொறுத்தவரையில், அறிஞர் அண்ணா அவர்களின் சுட்டுவிரலைக் காட்டிலும் வலிவற்றதாகவே இருக்கும்! ஆனால் அறிஞர் அண்ணாவின் சுட்டுவிரல் காட்டியவழி திராவிடம் இயங்கும்; அதனை வேறுபக்கம் திருப்பும் ஆற்றல் படைத்தோர் வேறு யாரும் எதிர்ப்பட்டு நிற்க இயலாது!

இப்பொழுது இந்தியத் துணைக்கண்டத்தில் மூண்டெழுந்துவரும் மொழிவழி நாட்டுணர்ச்சியைப் பார்த்தால், இந்தியா—தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம், மராட்டியம், ஒரியா, வங்கம், குஜராத், பஞ்சாப், பாரத் என்று பல்வேறு துண்டுகளாக நாளடைவில் பிரிந்தே தீரும் என்பது உறுதி. ஒவ்வொரு மொழியினரும் தங்கள் தங்கள் பகுதியைத் தாங்களே ஆளமுடியும்—ஆளவேண்டும் என்று முயலுவார்கள். அப்படிப் பிரிந்துபோகும் மொழிவழி மாநிலங்களில் தென்னாட்டு மாநிலங்கள் நான்கும் ஒரு கூட்டாட்சியில் அமைவது எளிது; இயல்வதான செயலாகும். ஏனெனில் இந்த நான்கு பகுதிகளும் ஒரு கூட்டாட்சியில் அமைவதற்கான பொதுமைப்பண்புகள், இவற்றிடத்தே நன்கு பொதிந்து கிடக்கின்றன. தமிழகத்திற்கும் ஆந்திரம்—கேரளம்—கருநாடகம் ஆகியவற்றிற்கும் தனித்தனியாக இருக்கும் வேற்றுமை மாடப்புறாவுக்கும் மணிப்புறாவுக்கும் இருக்கிற வேற்றுமை என்றால், தமிழகத்திற்கும் வடநாட்டிற்கும் இருக்கும் வேற்றுமை மாடப்புறாவுக்கும் வல்லூறுக்கும் இருக்கும் வேற்றுமையாகும். அதுபோலவேதான் ஆந்திர — கருநாடக — கேரளத்திற்கும் வடநாட்டிற்கும் இருக்கும் வேற்றுமையுமாகும். தென்னாட்டு அரசுகள் நான்கும் வடநாட்டுத் தொடர்பை வெட்டிக்கொண்டு வாழுகிற இயற்கையமைப்பிலும், தங்களுக்குள் ஒன்றோடொன்று கூட்டுறவு வைத்துக்கொள்ளுகிற இயற்கையமைப்பிலுந்தாம் அமைந்துகிடக்கின்றன. என்றைக்கேனும் ஒருநாள் தென்னாடு திராவிடக் கூட்டாட்சி நாடாக மலர்வதற்கான அறிகுறிகள் நாளுக்கு நாள் வளர்ந்துவருவதைக் காணலாம்.

தமிழகத்தில் பிரிவினை முழக்கம் செய்யும் மனப்பான்மையுடையோர் ஆட்சிப்பீடத்திலிருக்கவேண்டிய நிலைமை ஏற்படுமாயின், பிறகு, நான்கு தென்னாட்டு அரசுகளிடையே இருக்கவேண்டிய கூட்டுறவு பற்றியும், வடநாட்டினின்றும் பிரியவேண்டிய அவசியம் பற்றியும் தமிழகம் பிற பகுதிகளிடையே அடிக்கடி பேச்சுவார்த்தைகள் நடத்த, அந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெறும் கட்டம் வரும்போது, திராவிடநாடு திராவிடர்க்கே ஆகித்தானே தீரும். தென்னாட்டு அரசுகளுக்கு மத்திய அரசாங்கத்திடத்தும், வடநாட்டு வாணிகப் படையெடுப்பிடத்தும் நாளுக்கு நாள் வெறுப்பு தோன்றிவருகிறது; அந்த வெறுப்பு திராவிடக் கூட்டாட்சி தனியே மலர்வதற்குத் துணைசெய்வதாக முடியும். திராவிட முன்னேற்றக்கழகத்தின் வசதியும், வளமும், சிறப்பும் செல்வாக்கும் வளர வளர, அரசியல் சூழ்நிலைகள் மாறமாற, மத்திய அரசாங்கத்திடத்து வெறுப்புத் தோன்றத்தோன்ற, வெள்ளையன் சுரண்டலையும்—வடநாட்டுக் கொள்ளையன் சுரண்டலையும் வெறுக்க வெறுக்கத் 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்ற கோரிக்கையை ஆந்திரத்தான் ஆதரிக்கவே செய்வான்; கன்னடத்தான் காதுகொடுத்துக் கேட்கவே செய்வான்; மலையாளத்தான் மதிக்கவே செய்வான்!

உலகில் தோன்றிய விடுதலை இயக்கம் எல்லாம் மக்களின் ஆதரவைப் பெற்றபிறகே திட்டம் தீட்டின என்பதில்லை; திட்டம் தீட்டிக்கொண்டுதான் மக்களின் ஆதரவைப் பெற்றன. அதுபோலவேதான் திராவிட முன்னேற்றக் கழகம் திட்டம் தீட்டிக்கொண்டு ஆதரவைத் திரட்டுகிறது. காலம் மாறுகிறது கருத்து வெல்லும் என்ற உறுதிப்பாடு கழகத்திற்கு உண்டு.



தையற் கலை

கே.பி.சுந்தரம், G.C.T.

சிறுவர்களின் உடை அளவு எடுக்கும் முறை

உடையின் அளவுகளை ஆதாரமாகக் கொண்டு தான், காகிதத்தின்மீதும், துணிகளின்மீதும் கோடுகள் வரையவேண்டும். ஆகவே அளவுகளை கவனமாகவும் சரியாகவும் எடுக்கவேண்டியது மிக முக்கியமாகும். அளவுகள் சரியான முறையில் எடுக்கப்படவில்லை என்றால் வெட்டுவதற்கும் தைப்பதற்கும் செலவிடப்பட்ட நேரம் வீணாவதோடு பொருளும் பாழ்பட்டுவிடும்.

ஆடை அணிபவர்களின் விருப்பத்தை மனதில் கொள்ளவேண்டியது மிக முக்கியமாகும். அணிபவரின் விருப்பப்படி சில அளவுகளைக் கூட்டியோ குறைத்தோ எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படும்.

(1) முதுகு நீள அளவு

1-வது படத்தில் 1-ல் இருந்து இடுப்புப்பள்ளம் 2 வரை படத்தில் காட்டியபடி எடுக்க வேண்டும்.



படம் 1 படம் 2

(2) முழு நீள அளவு

1-வது படத்தில் 1-ல் இருந்து 3 வரை படத்தில் காட்டியபடி, அணிபவரின் விருப்பப்படி கூட்டியோ குறைத்தோ எடுக்கவேண்டும்.

(3) பாதித் தோள் அளவு

1-வது படத்தில் A-ல் இருந்து 4 வரை படத்தில் காட்டியபடி எடுக்கவேண்டும்.

(4) கை நீள அளவு

1-வது படத்தில் 4-ல் இருந்து 5 வரை படத்தில் காட்டியபடி அணிபவரின் விருப்பம் போல் கூட்டியோ குறைத்தோ எடுக்கவேண்டும். முழு நீளக் கை அளவு 4-ல் இருந்து முன்னங்கை வரை எடுக்கவும்.

(5) மார்புச் சுற்று அளவு

மார்புச் சுற்றளவு என்பது, மார்பையும் முதுகையும் சுற்றி எடுப்பது. இன்ச் டேப்பை இறுக்கியோ அல்லது தளர்த்தியோ பிடிக்கக் கூடாது. டேப்பை அக்குளுக்குச் சிறிது கீழ்ப் படுத்தி, மார்புகளுக்குச் சற்று மேலே எடுக்க வேண்டும். முதுகுப்புறத்தில் டேப் கீழே நழுவிவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

2-வது படத்தில் 6-வது எண் மார்பளவை எடுக்கும் விதத்தைக் காட்டுகின்றது. படத்தில் காட்டியபடி அளவு எடுக்கவேண்டும்.

(6) இடுப்புச் சுற்று அளவு

2-வது படத்தில் 7-வது எண் இடுப்புச் சுற்றளவு எடுக்கும் முறையைக் காட்டுகின்றது. படத்தில் காட்டியபடி இடுப்பு அளவு எடுக்க வேண்டும்.

(7) கைச் சுற்று அளவு

2-வது படத்தில் 8-வது எண் கைச்சுற்றளவு எடுக்கும் முறையைக் காட்டுகின்றது. படத்தில் காட்டியபடி கைச்சுற்றளவு எடுக்க வேண்டும்.

Regd. No. M 6296 MANRAM

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண் சங்கு சியக்காய்த்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் - ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

உரிமையாளர்: S. பெத்தண்ணா நாடார்

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மன்றம்

மலர் - 2

1953 - 54

24 இதழ்கள்கொண்டது

அழகிய முறையில் பைண்ட் செய்யப்பட்ட

வால்யூம் விலை ரூ. 8-0-0

மலர் 2-ல் முதல் இதழ் தவிர மற்ற 23 இதழ்களும் பைண்ட் செய்யப் படாமல் அனுப்ப ரூ. 6-12-0 அனுப்பவேண்டும்.

தனி இதழ் வேண்டுவோர் (1-5-53 தவிர) இதழ் ஒன்றுக்கு 5 அணா வீதம் தபாற்தலைகள் அனுப்புதல் வேண்டும்.

நிர்வாகி, மன்றம்,
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

மன்றம் பதிப்பக வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் M. A.
எழுதியவை

கண்ணீரும் செந்நீரும்

வளர்த்த கழகம்	0—12—0
மறைந்த திராவிடம்	0— 3—0

இரா. செழியன் M. A.
எழுதியவை

ராஜாடி ராஜா	0—12—0
பொது அறிவு	0— 8—0

வியாபாரிகட்கு 25% கழிவு. வி. பி. மூலம் அனுப்ப அதன் கட்டணம் தனி.

விபரங்கட்கு:

நிர்வாகி, மன்றம் பதிப்பகம்,
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.